www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.10 திருவள்ளுவர் ஆண்டு 2053

14.04.2022 - 13.05.2022

ISSN : 2195-6480

FREE Magazine



## போரைத் தவிர்க்க போர் புரிதல்

## சோமாலியாவாக மாறிவரும் இலங்கை



## மண்டியிடும் கோட்டா... சண்டைக்கு அழைக்கும் சஜித்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA



Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
TKS BEST FOODS
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
149€
பெறுமதியுள்ள
V BOX
119€*
கிடைக்கும்
மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS
Haldiram's
Aachi
The Mother of Good Taste
Elephant House
GRB
TRS
Tilda
Legendary Rice
Maliban
MTR
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de

ortel MOBILE







## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to 20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***




## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU


Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat


Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***



**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play | App Store

Aufladbar mit: ortel MOBILE, O2, e-plus




AKARAM

# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 பங்குனி 2022 - 13 சித்திரை 2022

சுவடி / ISSUE 9.10



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany

Tel: 00 49 176 47 11 87 11

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**'அகரம்' வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல்பெருமக்களுக்கும் எல்லா நலமும், வளமும் பெருக இறையருளை வேண்டுகிறது.**

1977 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், தமிழ் மக்களின் தனித் தமிழ் ஈழ தேசத்தை அமைக்கும் மக்கள் ஆணைக்கான கருத்துக்கணிப்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணியில் தலைமை வகித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் வாக்காளரிடம் பிரகடனப்படுத்தி அமோக வெற்றி பெற்றது. அடுத்து அதன் தலைமையிலான அரசியல் துரோகங்கள் அனைவரும் அறிந்ததே!.

பின்னர் அதே துரோகத் தலைவர்கள் மீது நம்பிக்கை வைத்து, அவர்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் 'புதிய மொந்தையில் பழைய கள்'ளை சம்பந்தன் தலைமையில் தந்து, தானும் தமிழ் இனமும் அழிக்கப்பட்ட துரோக வரலாற்றை யாராலும் முழுமையாக எழுதமுடியாது. அத்தனையும் சிதம்பர ரகசியம் போன்ற 'சம்பந்தனின் இரகசியம்'. அன்று தந்தை செல்வா நோய் காரணமாக இறக்கும் வரை துரோகிகளின் சுமை தாங்கியாக 'கடவுளே காப்பாற்றட்டும்' என சொல்லிச் சொர்க்கம் போனார்.

இன்றும் சம்பந்தன், சுமந்திரனின் தொட்டப்பாவாக அரசியல் செய்கிறார். தத்துப்



யூட் லால் பர்ணாந்து



சிவாஜி லிங்கம்

பிள்ளையான மாவை, தேர்தலில் தோற்றுவிட்டதால், மாகாண சபை முதல்வர் கனவில் மிதக்கிறார். தமிழரின் அரசியல் தலைமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியா? அல்லது தமிழர் விடுதலைக் கூட்டமைப்பா? என்கிற இரண்டு தலை ஆடு போல, தலைக்கு ஒரு கோரிக்கையாக இந்தியப் பிரதமர் மோடியிடம் இரு தலை ராகம் பாடுகின்றன. இரண்டினது இராகங்களுமே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் ‘இழவு வீட்டில் பாடப்படும் ஒப்பாரி’யான முகாரிதான்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இந்திய ஆட்சியாளர்கள் இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் உள்ள தமிழர்களைப் பொறுத்தமட்டில் சிங்கள அரசியல்வாதிகளை விடவும், மோசமாகத் தமிழர்களை நடத்தும் பண்பாட்டைக் கொண்டவர்கள். இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளப் புத்தகங்களைப் படிக்கத் தேவை இல்லை. 1983 இன் தொடக்கம் நாம் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்தாலே எல்லாம்தெரிந்துவிடும்.

ஆனால் சிவாஜி லிங்கம் ஒருவரைத் தவிர, வேறு யாரும் தெளிந்த அறிவுடன் அரசியல் பேசுவதாகத் தெரியவில்லை. கூட்டமைப்பின் கட்சிகள் ஒன்றும், தமிழரசுக் கட்சி வேறொன்றும், சுமந்திரன் தானொன்றுமாக கோரிக்கை வைக்கிறார்கள். அப்படி வைக்கப்படும் சரக்கும் பழையது. கேட்கும் இடங்களும் எல்லாருக்கும் தெரிந்த இலங்கை, இந்தியா, அமெரிக்கா என்கிற பழைய நாட்டாமைகள்தான்.

சில நேரங்களில், ஆனால் தொடர்ச்சியாக, உறுதியாக, தெளிவாகப் பிரித்தானியாவிடமும், சர்வதேச நாடுகளிடமும் திரு.விக்கினேசுவரன் பொது மக்களின் விருப்பு வாக்கின் அடிப்படையில் தமிழ்மக்களுக்கான பாதுகாப்பான நிரந்தரத் தீர்வு என வேண்டுகோள்விடுக்கிறார்.

சர்வதேச நாடுகளில் எந்த நாட்டை நாம் நம்பலாம்? என்கிற கேள்வி எழுகிறது. இப்படியான நிலையில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில், எமது தலைவர்கள் யாரும் வழக்குத் தாக்கல் செய்ய முன்வராத நிலையில், தனியார் சிலரால் இலண்டனிலும், கனடாவிலும் இரண்டு வழக்குகள் வரப்போவதான செய்திகள் சிறிது ஆறுதலைத்தருகிறது. இத்தருணத்தில் முதன் முறையாக அயர்லாந்திலும், ஜெர்மனியிலும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் வெற்றிகரமாக வழக்காடி, வெற்றிபெற்ற திரு.யூட் லால் பர்ணாந்து அவர்களின் மனிதாபிமான சாதனையை அகரம் நினைவு படுத்தாமல் இருக்க முடியாது.

தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுத்து அழிப்பதையே தமதுஅரசியலாகவும், வாழ்நாள் சாதனையாகவும் கொண்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள், போராளிக் குழுக்கள் மற்றும் புலிகளின் சொத்துகளால் பெரிய மனிதர்களான அத்தனை பேரையும் என்ன சொல்லி வாழ்த்துவது? எனத் தெரியாது விடைபெறும்.

மீண்டும் வரும் வரை விடை பெறும்...

**ஆசிரியர்,** அகரம் குழுமம்



# இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய அமெரிக்காவின் இரகசிய ஆவணம்!

த. எதிர்மன்னசிங்கம்



**தமிழ் இனத் துரோகி இலட்சுமணன் கதிர்காமனின் காட்டிக் கொடுப்புகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையும், தமிழ் இனத்தையும் வேரோடு அழிக்க உதவிய மனித குலத் துரோகத்தின் உச்சம். இதனை ஆதாரங்களுடன் 2021ல் அமெரிக்கா வெளியிட அனுமதித்த, அரச ஆவணம் பற்றிய தமது 25.10.2021 கட்டுரையில் கொழும்பு அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பொறுப்புகள் பற்றிய ஆய்வுப் பணிகளைச் செய்த திரு.தயா கமகே தமது கட்டுரையில் விளக்கமாக கூறி உள்ளார்.**

*2002 -2004* அமைதிப் பேச்சுகளுக்குப் பல வருடங்களுக்கும் முன்னரே கொலின் பவல் அமெரிக்காவின் பாதுகாப்பு உதவிச் செயலராக ஈடுபடுத்திக் கொண்ட வரலாறு, *1983*ல் உலகம் கண்டு அதிர்ச்சியுற்ற தமிழ் மக்கள் மீதான ஜுலை *1983* இன அழிப்பு ஏற்படுத்தி இருந்தது.

அமெரிக்க அரசு செயலர் வைன்பெர்க்கருடன் ***(Secretary Weinberger)*** தலைமை இராணுவ பதில் உதவிச் செயலாளரான கொலின் பவலும் கொழும்புப் பயணமாக வந்திருந்தார். பவலின் இந்தப் பயணத்தின் பின்னரே இலங்கையின் அமெரிக்க கொள்கை வகுப்பின் அடித்தளம் இன்று வரைக்கும் பின் பற்றப்பட்டு வருகிறது.

பவலின் சில முன் அனுமானிக்கப் பட்ட அமெரிக்கத் திட்டம் என்பதை கொழும்பு அமெரிக்கத் தூதரக அரசியல் பொறுப்புகளின் ஆய்வாளர் என்ற வகையில் காண முடிந்தது என்கிறார் திரு.தயா.கமகே.

கொலின் பவல் எவ்வளவு முக்கியமான பதவியில் இருந்தார் என்பதை, பாதுகாப்புச் செயலர் வைன்பேர்க்கரின் தலைமை இராணுவ உதவியாளராக, வெள்ளை மாளிகையில் அமெரிக்க அரசின் உலக கொள்கை வகுக்கும் தேசிய பாதுகாப்புச் சபையில் உள்ளவர் என்கிற தகுதி ஒன்றே போதும். அவரின் பதில் உதவியாளராகவும், தேசிய பாதுகாப்புச் சபையின் உறுப்பினராகவும் றிச்சாட் ஆமித்ரேஜ் செயலாற்றும் அளவுக்கு வைன்பேர்க்கர் முக்கியமானவர்.

வைன் பேர்க்கர் - ஆமிற்ரேஜ்- கொலின் பவலின் ஒக்டோபர் *1983*இல் இடம் பெற்ற வருகையால் வாஷிங்டனின் ஸ்ரீலங்கா தொடர்பான இராணுவக் கொள்கை வகுப்பில், அமெரிக்க தேசியக் கொள்கை வகுப்புச் சபையின் இரண்டு உறுப்பினர்கள் செய்த ஆய்வுகள், பெற்ற தரவுகள்,


கொலின் பவலுடன் லக்ஷமண் கதிர்காமர்

மதிப்பீடுகள் என்பன இப்போது 31 ஜனவரியில் வெளியான தடை செய்யப்பட்ட 1984ன் ஆவணங்களை வடிவமைப்பதில் முக்கிய வகிபாகம் பெற்றுள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது.

வாஷிங்டனின் கரிசனைகள் அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனமும் சிமிகி அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையும் இணைந்து தயாரித்த இந்த 1984 ஆவணத்தில் மிகப் பொருத்தமாக வெளிப்பட்டது. ஸ்ரீலங்காவின் தேசியப் பிரச்சினைகளின் தீர்வுப் பேச்சுகளில் அமெரிக்காவின் கரிசனைகள் அடுத்த சில ஆண்டுகளில் பெருமளவில் காணப்பட்டது. சில ஆண்டுகளின் பின்னர் கொலின் பவல் அமெரிக்க ராஜாங்கச் செயலராக 2002- 2004 நோர்வே ஆரம்பித்த அமைதிப் பேச்சுகளின் பொழுது, தீர்வுகளில் ஒன்றாக இலங்கையில் ஒரு சமஷ்டி ஆட்சி அமைப்பை உருவாக்குதல் என்பதும் இருந்தது.

இதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கான தீர்வை, கொலின் பவல் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிடம் 2001ல் இருவரும் வாஷிங்டனில் சந்தித்த பொழுது கேட்டுக் கொண்டார். தொடக்கத்தில் 1984இல் வாஷிங்டனின் புரிதல் ஒரு சமஷ்டி அமைப்பால் தமிழ் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவு செய்யும் என்றே இருந்தது. ‘தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அதிகாரம், பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி மீதான கட்டுப்பாட்டை உத்தரவாதப் படுத்தும் ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழ் மக்கள் திருப்தி அடைவார்கள்’ என அந்த அறிக்கை கூறுகிறது.

1984ஆம் ஆண்டு ஆவணத்தை ஒருவர் படிக்கும் பொழுது, வெளி நாடுகளின் சிறுபான்மை இனங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில் கொண்டுள்ள மன நிலையை நன்றாக விளங்கிக் கொள்ள முடியும். அந்த ஆவணம் இப்படிப் பிரகடனப் படுத்துகிறது, ‘ஜயவர்த்தன அரசுடன் ஐக்கிய அமெரிக்கா இக்கால கட்டத்தில் நெருக்கமான உறவைப் பேணுவது, அமெரிக்காவின் நற்பெயரை இப்பகுதியிலும் 3ஆம் உலக நாடுகளின் சில பகுதிகளிலும் பாதிக்கக் கூடும். அதனை ஏனைய சிறிய இனக் குழுக்கள் அமெரிக்கா சிறுபான்மை மக்களை




அரசுகள் அடக்குவதை அங்கீகரிப்பதாகப் பார்க்கப்பட்டு விடும்.'

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர் கொள்ளத் தேவையான, தடுப்பு இராணுவத் தளபாடங்களை வழங்க மறுப்பதால் ஏற்படும் பாதிப்புகளையும், அந்த ஆவணம் இப்படியாக வெளிப்படுத்துகிறது:- 'சிறுபான்மை இனங்களுடன் அரசியல் அதிகாரத்தைப் பகிர மறுத்து, பயங்கரவாத எதிர்ப்பு தண்டனைகளை அமுலாக்குவதும், தமிழ் மக்கள் மீதான பாதுகாப்புப் படைகளின் வன்முறைகளைக் கட்டுப்படுத்தத் தவறுவதும், தீவிரவாதிகளின் விருப்பங்களை நிறைவேற்றவும், புரட்சிக்கானத் தமிழரின் கோரிக்கை சமஷ்டி அமைப்பின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமும், பொருளாதார அபிவிருத்தி அதிகாரத்தைத் தமிழ் மக்கள் பெரும்பான்மையானப் பிரதேசங்களில் உறுதிப்படுத்தும்'.


1983இல் அமெரிக்க மூவர் அணி (வைன் பேர்க்கர் - ஆமிற்ரேஜ் - கொலின் பவல்)கொழும்பு விஜயத்தின் பொழுது கற்றுக் கொண்டவை. அந்த ஆவணத்தின் பிரகடனத்தில் மிகச் சரியாக இப்படிப் பிரதிபலித்தது:- '1983 கலவரங்களின் உச்சக் கட்டத்தில் இலங்கை அரசாங்கம் பகிரங்கமாக அதன் சிங்கள பௌத்த வாக்காளரின் அபிலாசைகளை ஏற்றுக் கொண்டது.'

இத்தகைய கருத்துகள் மே மாதம் 5ஆம் திகதி, 2001இல் வாஷிங்டனில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் கதிர்காமரைச் சந்தித்த பொழுது, பவலின் மன நிலையில் பிரதிபலித்தன. தமிழரின் பிரச்சனைகளுக்கானத் தீர்வு, இராணுவத் தீர்வாக இருக்க முடியாது என அவர் வற்புறுத்தியதுடன், கொழும்பு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதலை நிறுத்தி, பேச்சு வார்த்தைகளைத் மீளத் தொடங்க வேண்டும் எனத் தாம் நம்புவதாக வற்புறுத்தியதில் வெளிப் பட்டது. அதே நேரத்தில் இலங்கையின் ஒற்றுமை பிரதேச ஒருமைப்பாடு பற்றிய அமெரிக்காவின், ஸ்ரீலங்கா தொடர்பான நிலைப்பாட்டை உறுதிப் படுத்தினார். 2002-2004 அமைதிப் பேச்சுகளின் உட்கிடக்கை அப்படித்தான் இருந்தது.

**(தொடரும்)**


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு




**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**
**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**



பாகம் : 25

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

தமிழ்ச் சமூகத்தில் மட்டும் நடக்கும் ஒரு விசித்திரமான விடயம் என்னவென்றால், அதிகம் படிக்காதவர்களுக்கு நமக்கு ஏன் ஒரு நாடு வேண்டும்? என்பது அவர்களுக்கு சொல்லாமலே புரிகிறது, ஆனால் அதிகம் படித்த பெரும்பான்மையானவர்களுக்கு எவ்வளவு சொன்னாலும் புரிவதில்லை. அவர்களுக்கு புலிகளின் போராட்டத்திற்கான நியாயப்பாட்டையும் புரிந்து கொள்ள முடிவதில்லை. இக்கட்டுரையின் நோக்கம் என்பது நாம் ஒரு இனமாக, நமது இருப்பைத் தக்கவைக்க தேசியத்தின் அடிப்படை முக்கியத்துவத்தையும், தேவையையும் விளக்குவதே. இதற்கு சான் மேர்சைமர் ***(John Mearsheimer)*** மற்றும் சுடீபன் வால்ட்டு ***(Stephen Walt)*** ஆகியோரின் ஆய்வுகளைப் பயன்படுத்துகிறேன்.

## 1. தேசியம்தான் உலகில் ஆற்றல் வாய்ந்தது

இவ்வுலகில் அதிக ஆற்றல் கொண்டது அணுகுண்டுகளோ, இணையமோ, கம்யூனிசமோ, முதலாளித்துவமோ, மதமோ, அல்லது கடவுளோ கிடையாது. இன்றைய உலகில் ஆற்றல் வாய்ந்தது தேசியமே. ஒரு பொதுவான மொழி, பண்பாடு கொண்ட மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமை கொண்டவர்கள் என்ற எண்ணம்தான் தேசியம். இந்த தத்துவம்தான் கடந்த 500 வருட உலக வரலாற்றைத் தீர்மானித்திருக்கிறது, இன்றும் தொடர்ந்து ஆற்றல் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை, இன்னும் பலர் உணர்வதில்லை.

இன்று ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறியதற்கான காரணம் தேசியம்தான். அதுபோல அமெரிக்காவின் திரம்பு "அமெரிக்காவை மீண்டும் உயர்த்துவோம்" என்றதும், சீனாவை மீண்டும் உலகின் தலைமையாக்குவோம் என்ற அவர்களின் குறிக்கோள்களும், மேலும் ஐரோப்பிய நாடுகளில் தோன்றியிருக்கிற வலது சாரி இயக்கங்களுக்கும் அடிப்படை தேசியமே. நமது ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும், இனவழிப்பிற்கும் காரணம் நம்மை அடிமைப்படுத்தி அழிக்க நினைக்கும் சிங்கள தேசியம்தான். இந்தியாவில் தீவிர இந்தி மற்றும் இந்துமத திணிப்பிற்கும், இனக்கலவரங்களுக்கும் பின்னால் இருப்பது இந்துத்வ தேசியமே!.

இன்றைய நமது பெரும்பாலான சிக்கல்கள் எல்லாம் தேசியம் சார்ந்து உருவாகியதே!. இதைச் சரியாக நாம் எதிர்கொள்ளவில்லை என்றால், நாம் ஒரு இனமாக நமது இருப்பைத் தக்கவைக்க முடியாது. மற்ற இனங்களில் கரைந்து, தமிழினம் என்பது இல்லாமல் போகும்.



அதற்கு 50-100 வருடங்கள் பிடிக்கும், ஆனால் இன்றைய நிலை தொடர்ந்தால் அழிவு உறுதியானது. இதை நான் பயமுறுத்துவதற்காகக் கூறவில்லை. இதுதான் நிதர்சனம், வரலாறு கூறும் பாடம்.

### 2. ஏன் தேசியம் முக்கியமானது?

உலகிலுள்ள நாடுகளுக்கிடையே நீதியை ஏற்படுத்த எந்த காவல்துறையும், நீதிபதியும் இல்லை (ஐநா என்பது தரகு அமைப்பு). அதனால் நாடுகள் தங்களது வலிமையினால் மட்டுமே தங்களது உரிமைகளைத் தக்கவைக்க முடியும். இதன் விளைவாக ஒவ்வொரு நாடும், மற்ற நாடுகளுடன் போட்டியிலோ, பனிப்போரிலோ இருக்கிறது. அது எப்பொழுது வேண்டுமானாலும் போராக வெடிக்கலாம். அவ்வாறான போட்டிகளில் ஒரு நாடு வெல்ல வேண்டுமானால், நாட்டு மக்கள் ஒற்றுமையாகவும், நாட்டுக்குத் தியாகம் செய்யத் தயாராகவும் இருக்கவேண்டும்.

அவ்வாறான ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான அழுத்தத்திலேயே ஒவ்வொரு நாடும் இருக்கின்றன. அதனால் ஒவ்வொரு நாடும் தனது மக்களிடையே ஒரே மொழி, பண்பாடு கொண்ட ஒரு தேசிய இன மக்களாக மாற்ற முனைகிறது. உதாரணமாக இந்து, இந்தி, இந்தியா என்ற ஒற்றை தேசியமாக இந்துத்வா அமைப்புகள் இந்திய நாட்டை கட்டமைக்க முனைகின்றன. அதேபோல சிங்கள நாடு, இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியம் இருப்பதை அச்சுறுத்தலாகப் பார்க்கிறது. இலங்கை நாட்டை சிங்கள பௌத்த தேசிய நாடாக மாற்றுவதுதான் அவர்களின் இலக்கு.

அடிப்படையில் ஒரு நாடு என்பது பன்மைத் துவத்தை அழித்து, ஒற்றை மொழி பண்பாடு கொண்ட மக்களாக மாறுவதை நோக்கியே செயல்படுகின்றன. உதாரணமாக 200 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சு நாட்டில் பிரஞ்சு மொழி என்பது சிறுபான்மை மொழி. காலப்போக்கில் மற்ற மொழிகளை எல்லாம் அழித்து, பிரான்சு என்ற ஒற்றை மொழி கொண்ட நாடு






நாம் இதுபோன்ற நிலையில் சிக்கி இருக்கிறோம். நாம் அடைபட்டிருக்கும் நாடுகளின் இறுதி இலக்கு என்பது, நமது அடையாளங்களை அழித்து, அவர்களைப் போன்று நம்மை மாற்றுவதே. எந்த நாடும் இதை வெளியில் சொல்லாது. ஆனால் அதுதான் அவற்றின் நோக்கம். ஏனென்றால் ஒரு நாடாக பிழைக்க வேண்டுமானால் இதைச் செய்துதான் ஆகவேண்டும். இல்லையென்றால் அந்நாடு காலப்போக்கில் சிதறி அழிந்து விடும்.

தேசியம் என்பது நவீன உலகின் தத்துவம், மேற்குலகின் மூலம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்தது. இந்தியாவில் முன்பு பல்வேறு இன, மொழி, மத மக்கள் சிக்கலின்றி வாழ்ந்தார்கள். அரசர்களும், அரசுகளும் மாறும். ஆனால் மக்களின் மொழிகள் அடையாளங்கள் அழியவில்லை. தேசியம் வந்த பின்புதான் இனங்களுக்கு இடையேயான பகை என்பது அசுர உருவம் எடுத்தது.

உருவானது. இதுதான் ஒவ்வொரு நாட்டின் இலக்கு. இந்தியாவும் அதை நோக்கியே நகருகிறது.

அதனால் தனித்த மொழியும், பண்பாடும் கொண்ட மக்கள், தங்களுக்கென்று ஒரு நாட்டை அமைக்கா விட்டால், அவர்கள் மற்றவர்களுக்கு அடிமைப்பட்டு, உள்ளிழுக்கப்பட்டு கரைந்து காணாமல் போவார்கள். இதனால்தான் தங்களைக் காத்துக்கொள்ள நாடில்லாத பல தேசியங்கள் நாட்டை அமைக்கப் போராடுகிறார்கள். அவர்களை ஆக்கிரமித்துள்ள நாடுகள் அவர்களை அடக்கி ஒடுக்குகிறது, இனவழிப்பு செய்கிறது. இன்று குர்து, பாலசுதீன, தமிழ் மக்கள் இதற்கு சிறந்த உதாரணங்கள் என்கிறார் சுடீபன் வால்ட்டு.

சுருக்கமாக தேசியம் இருவிளைவுகளை உலகில் ஏற்படுத்துகிறது 1. ஒவ்வொரு தேச மக்களும் தங்களுக்கான நாட்டை உருவாக்க முனைகின்றனர். 2. ஒவ்வொரு நாடும் மக்களை ஒரே மொழி பண்பாடு கொண்ட மக்களாக மாற்றி, தேசியத்தை வளர்த்து தன்னை அழியாமல் பாதுகாக்க முனைகிறது. தனி நாடு கேட்கும் மக்களை அடக்கி ஒடுக்குகிறது, நாட்டைவிட்டு விரட்டி அடிக்கிறது, இனவழிப்பு செய்கிறது, மக்களை அடைத்துப் பாடம் எடுக்கிறது (உதாரணம்: சீனா).

இந்தியப் பிரிவினையின் போது 10 இலட்சம் பேர் இறந்தார்கள், பலகோடி பேர் இடம்பெயர்ந்தார்கள். இன்றும் அது பெரும் பகையாக இருக்கிறது. அதேபோல இலங்கைத் தீவில் தமிழர்களும், சிங்களவர்களும் நட்புடன் இருந்தார்கள். ஆனால் தேசியம் வந்தபிறகு இனப்படு கொலையில் வந்து நிற்கிறது. இதுபோன்ற நிகழ்வுகள் உலகெங்கும் நடந்திருக்கின்றன, தொடர்ந்து நடக்கின்றன.

சிலருக்கு இன்னும் புரிவதில்லை. தமிழினம் ஆயிரக்கணக்கான வருடங்கள் தொடர்ந்து வந்திருக்கிறது, அதனால் தொடரும் என்று நம்புகிறார்கள். இது பிழையான பார்வை. அன்று தேசியம் இல்லை. இன்று எதிரிகளின் தேசியம் நம்மை அழித்து, முற்றிலுமாக அவர்களுக்குள் கரைப்பதை நோக்கி செயல்படுகிறது. நாம் இதிலிருந்து தப்பிப் பிழைக்கவேண்டுமானால் தமிழ்த் தேசியம் தவிர வேறு எந்த வழியும் கிடையாது.

இதனால்தான் புலிகள் இறுதிவரை இறையாண்மை கொண்ட நாடுதான் இறுதி இலக்காகக் கொண்டு செயல் பட்டார்கள். இடைப்பட்ட தீர்வு என்றாலும், அது இறையாண்மை கொண்ட நாட்டை அடைவதற்கான ஒரு பாதையைக் கொண்டதாக இருக்கவேண்டும். வேறு எதுவும் இறுதித் தீர்வாக அமையாது. இல்லையென்றால் அவ்வாறான தீர்வுகள் நம்மை தீர்த்துக் கட்டுவதாகத்தான் அமையும்.

இதைத் தமிழின வரலாற்றில் சரியாக உணர்ந்து, எதிர்வினை ஆற்றியது பிரபாகரன் மட்டுமே!... அதைத் தமிழின அறிவுச் சீவிகளே சரியாகப் புரிந்து கொள்ளாதது, எவ்வளவு தூரம் நாம் சிந்தனையில் வீழ்ந்திருக்கிறோம் என்பதையே காண்பிக்கிறது. தலைவர் பிரபாகரனுக்கு இருந்த உலக அரசியல் தெளிவு என்பது, இதுவரை தமிழினத்தில் தோன்றிய எந்த தலைவருக்கோ அல்லது அறிவுச் சீவிக்கோ இருந்தது இல்லை, இன்றும் இல்லை. உலகில் பல சிக்கல்களைத் தீர்க்கமுடியாமல் போவதற்கு தேசிய உளவியல் ஒரு முக்கிய காரணம். அது பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளது.

### 1. அச்சுறுத்தல்

அரசியல்வாதிகள் தேசியம் பேசி, அச்சுறுத்தி மக்களை அணி திரட்டுகிறார்கள். உதாரணமாக இந்துத்வா இசுலாமியர்களின் மீது வெறுப்பை வளர்த்து, இந்துத்வ தேசியத்தை வளர்க்கிறது. இந்துக்கள் அச்சுறுத்தலில் இருக்கிறார்கள் என்றும், அவர்களால்தான் இந்தியாவையும், இந்துக்களையும் காப்பாற்ற முடியும் என்கிறது. இதே போன்றுதான் சிங்கள பௌத்த தேசியம் தமிழர்களை அச்சுறுத்தலாகப் பார்த்து, இனவழிப்பு செய்திருக்கிறது. இதுபோன்ற நச்சு தேசியங்கள் உலகெங்கும் தோன்றி இருக்கின்றன. மனிதனின் இயற்கையான உளவியல் அரசியல்வாதிகள் இவ்வாறு செயல்பட வாய்ப்பளிக்கிறது.




## 2. இரட்டை நிலைப்பாடு.

ஒரு தேசம், தான் செய்யும் அனைத்தும் சரி என்று நியாயப்படுத்தும், ஆனால் அதே செயலை மற்றவர்கள் செய்தால் அதை மோசமானதாக சித்தரிக்கும். சுருக்கமாகச் சொன்னால் தனக்கு வந்தால் இரத்தம், மற்றவர்களுக்கு வந்தால் தக்காளி சட்டினி. இவ்வாறுதான் உலக தேசியங்கள் செயல்படுகின்றன. மற்றவர்கள் படும் துன்பமும், தன்னையுடைய இரட்டை நிலைப்பாடும் ஒரு தேசத்திற்கு தெரியாது.

இதை பெரிய அமெரிக்காவிலிருந்து குட்டி இலங்கை வரையும் காணலாம். ரசியா உக்கிரனைத் தாக்கியதைக் குற்றமாகப் பார்க்க முடிந்த அமெரிக்காவால், தான் மற்ற நாடுகளை தாக்கியதைக் குற்றமாகப் பார்க்க முடியவில்லை என்கிறார் சுடீபன் வால்டு. தேசியம் என்பது கண்களை மறைக்கும்.

மேலும் ஒரு தேசம் தனது வரலாற்றைத் தூய்மையாக, எழுதுவதால், அடுத்த தலைமுறைகளுக்கு தான் மாற்றவர்களுக்கு செய்த எந்தத் தவறுகளும் நினைவுக்கு இருக்காது. மேலும் எதிரிகளின் நியாயப் பாடுகளை விளக்கமால், அவர்களை மோசமாக வரலாற்றில் சித்தரிக்கிறது. இதனால் ஒவ்வொரு தேச மக்களுக்கும் தாங்கள் தூய்மையானவர்களாகவும், மற்றவர்கள் மோசமானவர்களாகவும் தெரிவார்கள். ஒவ்வொரு தேசமும் மற்றவர்களை சந்தேகக் கண்களுடனேயே பார்க்கிறது.

## 3. தேசம் விட்டுக்கொடுப்புகளையும், சமாதானத்தையும் எதிர்க்கிறது.

ஒரு நாடு தனது எல்லைகளை புனிதமாகப் பார்க்கும்பொழுது அதை விட்டுக் கொடுக்காது. சிங்களம் முழுத் தீவையும் இறைவன் அவர்களுக்கு அளித்த புண்ணிய பூமி என்று பார்க்கிறார்கள். நாம் அவர்களின் புனித பூமியில் ஆக்கிரமித்து நிற்கிறோம் என்பதுதான் அவர்களின் பார்வை. அவர்கள் எல்லையில் எந்த சமரசத்திற்கும் தயாராக இல்லை. இதுதான் ஈழப்போருக்கான அடிப்படை காரணம். அதேபோல இந்துத்வா இந்தியாவை




இந்துக்களின் புண்ணிய பூமியாகப் பார்க்கிறது.

இசுரேல் யூதர்களின் புனிதபூமி என்பதுதான் பாலசுதீன சிக்கலின் அடிப்படை. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் நாடுகள் நிலப் பரப்புகளை விற்பதும், வாங்குவதும் சாதாரணம். உதாரணாமாக அமெரிக்கா அலாசுகா மாநிலத்தை ரசியாவிடம் இருந்தும், லூசியானாவை பிரான்சிடம் இருந்து வாங்கியது. இன்றைய உலகில் எந்த நாடும் நிலங்களை விற்பதையும், வாங்குவதையும் பார்க்கமுடியாது. எல்லைகள் எல்லாம் புனிதமாகி விட்டன. ஒரு குண்டூசி நிலத்தையும் விடமாட்டோம் என்பதுதான் இன்றைய தேசிய உளவியல்.

## 4. உயர்வு மனநிலை

ஒவ்வொரு தேசமும் தன்னை மற்ற தேசங்களைவிட உயர்ந்ததாகப் பார்க்கும். தேசப்பற்று என்பதையும், தேசத்தின் பெருமை என்பதையும் பிரிக்க முடியாது. ஒரு தேசம் தன்னை உயர்வாக நினைப்பதால் போருக்கு அஞ்சுவதில்லை. தன்னைவிட வலிமையான எதிரி என்றாலும், பெரும்பாலும் போருக்குத் தயாராகவே இருக்கும். எளிதில் பின்வாங்காது. உதாரணமாக பாகிசுதான் இந்தியாவிற்கு அடிபணிவதில்லை. இந்த உளவியல் போர்களை எளிதில் உருவாக்குகிறது.

மொத்தத்தில் இன்றைய உலகில் நாம் தனித்து விடப்பட்டிருக்கிறோம். நமது துன்பங்களை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. யாரும் நமக்கு நீதி பெற்றுத் தரப்போவதும் இல்லை. எதிரிகளின் தேசிய உளவியல் நம்மை அழிப்பதை நோக்கியே செயல்படும். அவர்கள் நம்மை அச்சுறுத்தலாகப் பார்க்கிறார்கள், இணக்கமாக வாழவேண்டும் என்று அல்ல. ஒரு குண்டூசி அளவு நிலத்தைக் கூட நமக்கு அளிக்க மாட்டார்கள்.

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

பலர் இந்தியா அனைத்து மொழிவாரி இனங்களுக்கு உரிமை அளிக்கும் என நம்புகிறார்கள். ஆனால் இதெல்லாம் நடக்கப்போவதில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து மாநிலங்களின் உரிமைகள் தொடர்ச்சியாகப் பறிக்கப் பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இந்தியா என்ற நாடு தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டுமானால், அது மற்ற அடையாளங்களை அழித்து, ஒற்றை அடையாளமாக மாற்றுவதிலேயே இருக்கிறது. இல்லையென்றால் அந்நாடு உடையும். பல அடையாளங்களைக் கொண்ட நிலையான நாடு என்பது வரலாற்றில் இல்லை. இந்திய ஆளும் வர்க்கம் தெளிவாக ஒற்றை அடையாளத்தை நோக்கி நகர்கிறது.

இன்றைய நிலை அப்படியே தொடர்ந்தால் 50-100 ஆண்டுகளின் தமிழினம் என்று ஒன்று இவ்வுலகில் இருக்காது. நமது இருப்பு என்பது நமது பலத்தை மட்டுமே நம்பி இருக்கிறது. உலகில் தேசியம் என்ற கருத்தியல் ஆளும்வரை இந்த நிலை மாறப் போவதில்லை.

## தரவுகள்

*Walt, Stephen M. "You can't defeat nationalism, so stop trying." Foreign Policy 4 (2019).*

*Mearsheimer, John J., and John J. Mearsheimer. Great Delusion. Yale University Press, 2018.*



பூமிபுத்திரன்

# போரைத் தவிர்க்க போர் புரிதல்



**உக்ரைன் மீதான ரஸ்யப் படையெடுப்பு, ஒரு மாதத்தையும் கடந்து தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தனது 'இலக்கை' விரைவில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ரஸ்யாவுக்கு இருந்தாலும் கூட, ரஸ்யப் படைகளை அதிக காலம் உக்ரைனில் தங்க வைத்து, முடிந்தளவு சேதத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்பது அமெரிக்க தலைமையிலான மேற்குலகின் இலக்காக உள்ளது.**



**சோ**வியத் ஒன்றிய நாடுகளில் ஆப்கானிஸ்தான் நாட்டில் நிலைகொண்டிருந்த சோவியத் படைகளை முஜாஹுதீன்கள் என்ற பெயரிலான இஸ்லாமியத் தீவிரவாதிகளை உருவாக்கி, கட்டமைத்து, ஆயுதங்களை வழங்கி, எவ்வாறு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் கையாண்டதோ, அதேபோன்ற ஒரு அழிவை ரஸ்யப் படைகளுக்கு ஏற்படுத்தி விடுவதில் முழு மூச்சுடன் மேற்குலகம் ஈடுபட்டு வருவதை, நிகழ்வுகளைப் பக்கச் சார்பின்றி அவதானிப்பவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

படை நடவடிக்கைகளை ஆரம்பித்த நாள் முதலாக, பொதுமக்கள் பாதிப்புகளைக் குறைக்கும் வண்ணம், தேர்ந்தெடுத்த இராணுவ இலக்குகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தும் உத்தியை ரஸ்யா மேற்கொண்டு வந்தாலும், ரஸ்யா மீது மனித உரிமை மீறல் குற்றங்களும், போர்க் குற்றமும் சுமத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. போர் என்று வந்துவிட்டால் மீறல்கள் இருக்கவே செய்யும். அவை கண்டிக்கப்படவும் வேண்டும், மீறல்களில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், தனது சார்பு நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பை ரஸ்யாவுக்கு மறுதலிக்கும் விதமாக ரஸ்ய சார்பு ஊடகங்கள் யாவற்றையும் தடை செய்துவிட்டு, மேற்குலக சார்பு ஊடகங்கள் ஊடாக மாத்திரம் தாம் விரும்பிய செய்திகளை அனுமதிப்பது எத்தகைய தர்மம்?

ஊடகங்களில் இருந்து மாத்திரமன்றி, உலக வரைபடத்தில் இருந்தே ரஸ்யாவை அகற்றிவிட வேண்டும் என்பது போலவே காரியங்கள் யாவையும் நடைபெற்று வருவதைப் பார்க்க முடிகின்றது. ஒரு மோதலுக்கு அமைதி வழியில், பேச்சுக்கள் ஊடாகத் தீர்வுகாண விரும்புகின்ற யாராயினும் அவர்கள் பொறுமையையே கடைப்பிடிப்பர். வீராவேசப் பேச்சுகளைத் தவிர்த்துக் கொள்வர். ஆனால், உக்ரைன் அரசுத் தலைவர் ஷெலன்ஸ்கியிடமோ, அவரை ஆதரித்து நிற்கும் மேற்குலகத் தலைவர்களிடமோ பிரச்சனையைப் பேசித் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு சில தலைவர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவாகப் பேசினாலும், அவர்களின் குரல்கள் மேலெழுவதை அவதானிக்க முடியவில்லை. ஊடகங்களும் அத்தகைய குரல்களுக்கு முக்கியத்துவம் தருவதைக் காண முடியவில்லை.

மார்ச் 29ஆம் திகதி துருக்கி நகரான இஸ்தான்புல்லில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் உக்ரைன் ஒரு எழுத்து மூல ஆவணத்தைக் கையளித்திருந்தது. இந்த ஆவணத்தில் 'தனது நாட்டின் நடுநிலைத் தன்மையை உறுதிப்படுத்தத் தயார்' என உக்ரைன் தெரிவித்திருந்தது. ரஸ்யாவின் அடிப்படைக் கோரிக்கைகளுள் ஒன்றான இதனை, உக்ரைன் ஏற்றுக் கொண்டிருந்தமை ஒரு முக்கிய விடயமாகப் பார்க்கப்பட்டது. இதனையடுத்து உக்ரைனில் அமைதி திரும்பலாம் என்ற எதிர்பார்ப்பு உருவானது.



ஆனால், உக்ரைனில் உள்ள கடும்போக்காளர்களும், உக்ரைன் மோதலுக்குப் பல ஆண்டுகளாகவே தூபமிட்டு, தயாரிப்புகளில் ஈடுபட்டு, ஆக்கமும், ஊக்கமும் வழங்கி வந்த மேற்குலகும் அவ்வளவு இலகுவில் மோதல்கள் முடிவுக்கு வருவதை விரும்பமாட்டார்கள் என்றொரு கருத்து





அவதானிகள் சிலரால் முன்வைக்கப்பட்டது. முடிவில் அதுவே சரியென நிரூபிக்கப்பட்டு விட்டது. பேச்சுவார்த்தை நடைபெற்று ஓரிரு நாட்களிலேயே, ரஸ்யாவில் இருந்த எண்ணைக் கிடங்கு ஒன்றின் மீது உக்ரைனின் உலங்கு வானூர்திகள் தாக்குதல் நடத்தின.

மோதல் தொடங்கியதன் பின்னான காலப்பகுதியில் ரஸ்ய மண்ணில் உக்ரைன் நடத்திய ஒரேயோரு தாக்குதல் இதுவே. இந்தப் பத்தி எழுதப்படும் வரை வேறு எந்தத் தாக்குதலும் நடபெறவில்லை. ஆகவே, பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்படுவதை எதிர்க்கும் சக்திகளே இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்திருக்கலாம் என ஊகிக்க இடமுள்ளது. அது அரசுத் தலைவர் ஷெலன்ஸ்கிக்குக் கூடத் தெரியாமல் நடைபெற்றிருக்க வாய்ப்பும் உள்ளது.

ஒரு நகைச்சுவை நடிகராக பொது வாழ்வில் அறிமுகமான ஷெலன்ஸ்கி - ரஸ்யப் படையெடுப்பின் பின்னர் - ஒரு கதாநாயக அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றார். உலக மன்றங்களில் அவரது குரலுக்கு அதிக வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. ஆனால், அவருக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் உண்மையிலேயே அவரது தகுதிக்கும், திறமைக்கும் வழங்கப்படுகின்ற வாய்ப்புகள்தானா? அல்லது அவரது பிம்பம் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு ஊதிப் பெருப்பிக்கப் படுகின்றதா? என்பதையிட்டு அவர் ஒரு சுய பரிசோதனை செய்து கொள்ளுதல் நல்லது. சூழ்நிலையின் கைதியாக ஆக்கப்பட்டுள்ள அவர், நாளை தான் நினைத்தாலும் தனது நாட்டு மக்களுக்கு நல்லது என நினைக்கும் எதனையும் செய்துவிட முடியாத ஒரு இறுக்கத்துக்குத் தள்ளப்படும் வாய்ப்பு உள்ளது என்பதையே அமெரிக்காவின் கடந்தகால வரலாறு உணர்த்தி நிற்கிறது.

மனிதகுலம் நாகரிக வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் போர் என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், போரைத் தவிர்ப்பதற்கு எவ்வளவு காரணங்கள் உள்ளனவோ, அதேபோன்று போரில் ஈடுபடுவதற்கான காரணங்களும் உள்ளன. போரை விரும்பாதவர்கள் போரைத் தவிர்ப்பதற்கான பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது அவசியம். போருக்கான ஆயுதங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்து வைத்துக் கொண்டு போர்களைத் தவிர்த்துவிட முயன்றால் போர்களே உருவாகும் என்பதற்கு உக்ரைன் மோதலே அண்மைய எடுத்துக்காட்டு.



வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
20ஆம் ஆண்டில்....

# S.K. Silks & Gold Paradise

SINCE 2003

மாபெரும்
ராஜ
முத்திரை



ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

ப்ரியமதா பயஸ், தமிழீழம்





# சவால்களை எதிர்நோக்கும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையில் தமிழரின் மரபுரிமை உட்பட்ட சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய இயக்கங்களில் தனித்துவமானதொரு பேரியக்கமாகும். புலிகள் இயக்கம் ஆரம்பித்த காலம் தொடக்கம், இன்றுவரை இலங்கைத் தமிழர்கள் உரிமை, அரசியல், சகவாழ்வு, சமூகம் என்ற சகல சந்தர்ப்பங்களிலும் அவர்களது பெயர், பேச்சுக்குப் பேச்சும், வரிக்கு வரியும் உச்சரிக்கப்படாமல் இல்லை.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், வேண்டப்பட்ட விடுதலைக்காகவும் தம்மை விரித்துக்கொண்டு களம் புறப்பட்டவர்களாகவே அவர்கள் மக்கள்முன் தெரிந்தனர். கால ஓட்டம், புலிகள் பக்கத்தில் கருத்தாழம்மிக்க, ஒரு பற்றற்ற மாறுதலை உருவாக்கி முகமறியா மனிதர்கள் ஆக்கி இருக்கின்றது.

சீருடையும், சீரிய நன்னடத்தையும் கொண்டு சமூகத்துள் உலவியவர்கள், 2009ஆம் ஆண்டு இறுதிப் போருக்குப் பின்னர் சிறை, புனர்வாழ்வு, சமூகத்துடன் இணைப்பு என்ற மூன்று சம்பிரதாயமற்ற சடங்குகளுக்கு முகம் கொடுத்து, தாம் உயிர் கொடுக்கத் தயாராக இருந்த சமூகத்துக்குள் நிராயுதபாணிகளாக வரும்போது, முற்றிலும் மாறுபட்ட மனிதர்களாக வாழ்வியலை எதிர்கொள்கின்றனர். விரும்பியோ, விரும்பாமலோ அவர்கள் ஏற்றுக்கொண்ட பாத்திரத்திலிருந்து விடுபட முடியாமல் முத்திரை குத்தப்பட்ட மனிதர்களாக நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் முன்னாள் புலி உறுப்பினர்கள்.

பெரும்பாலான முன்னாள் புலி உறுப்பினர்கள் அங்கவீனர்களாகவும், போரில் தம் உடலில் ஏற்றுக்கொண்ட விழுப்புண் காரணமாக, உடல் பலமற்றவர்களாகவும் நடமாடுகின்றனர். பெரும்பாலான முன்னாள் புலி உறுப்பினர்கள் சிறை வாசத்தின்பின் திடீரென சாவடையும் உடல்நிலையிலேயே காணப்படுகின்றனர். இது தொடர்பான



உள்ளார்த்தம் பொதுவானதாகவே வைத்துக்கொள்வோம். ஆனாலும், சமூகம், வாழ்வியல் என்ற கண்ணோட்டத்தில் இவர்களது தளம், பொதுமக்கள் வாழ்வில் இருந்து சரிவர இரண்டாகப் பிரிக்கப் படுகிறது.

போருக்கு முன்னர் மதிக்கப்பட்ட அவர்கள், போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் அடங்கி ஒடுங்கி வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஒருசிலர் தமது வாழ்வியலையும், வாழ்க்கைப் போக்கையும் மாற்றிக் கொண்டு, வெளிநாடுகளில் தஞ்சமடைந்து வாழ்கின்றனர். பெரும்பாலானவர்கள் புனர்வாழ்வுக்குப் பின்னர் வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்ல முடியாத இக்கட்டான சூழலில், வாழ்க்கையை நகர்த்துகின்றமை முற்றிலும் உண்மையான விடயம்.

சமூகத்துக்குள் கலகலப்பாக, ஒரு அங்கமாக இருந்த புலி உறுப்பினர்கள், சுயமான பேச்சுச் சுதந்திரமோ, நியாயம், நீதிகளை எடுத்துரைக்கும் சுதந்திரமோ அற்றவர்களாகிப் போனார்கள். தாம் உண்டு, தம்பாடு உண்டு என வாழவேண்டிய நிர்ப்பந்தம், சூழல் காரணியாக அவர்களை முடக்கி வைத்திருப்பது, அவர்களது தனிப்பட்ட வாழ்வியலிலும், மனதளவிலும் கடுமையான தாக்கத்தைச் செலுத்துவதை உணரமுடிகின்றது.

மக்களோடு மக்களாக தங்களை நிலைநிறுத்திக்கொள்ள முடியாத ஒரு விசித்திரமான பிரிவு நிலையை அவர்கள் சந்திக்கின்றார்கள். கால ஓட்டத்தில் மாற்றம் கண்டுவரும் அரசியல், சமூக சூழ்நிலைகளே இதற்கான காரணம் என உணரமுடிகிறது.

பெரும்பாலும் அங்கவீனமுற்ற போராளிகளின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கின்றது. தமது வாழ்வியல் போக்கை மாற்ற வலு இல்லாமையால், அவர்கள் தமது வாழ்நாளோடு போராடும் நிலைமை பரிதாபத்துக்கு உரியதாக ஆகி இருக்கின்றது.

சமூகத்தில் இப்போது தலைவிரித்தாடும் சமூக ஊடகங்களுடன் தொடர்பில் இருப்பவர்கள், தமக்கான கருத்துச் சுதந்திரம் மூலம் ஓரளவு தமது பிரச்சினைகளை (பொருளாதாரம், மருத்துவம்) நண்பர்களோடு பகிர்ந்து, தமது வாழ்வை நகர்த்துகின்றனர். குறிப்பிட்ட ஒருசிலரின் நிலைமை சொல்லொணாத் துயரமானது. சமூகத்துக்குள் தாம் ஒரு முன்னாள் புலி உறுப்பினர் என்று சொல்வதால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் தொடர்பில் அவர்கள் இருதலைக்கொள்ளி எறும்பாகவே திண்டாடுகின்றனர். அரச, இராணுவப் பார்வை அவர்களில் இருந்து விலகாமல் கழுகுக்கண்கள் அவர்களை




மொய்த்துப் பிடித்த வண்ணம் உள்ளதும் உண்மையானதே.

இந்த முன்னாள் புலி உறுப்பினர்களின் வாழ்வியலை மேம்படுத்த பலர் முன்வருகின்ற போதும், அவர்களுக்கான உளவளத்தைத் தர எவரும் முன்வராமை கவலைக்குரியது. ஒருமனிதனால் மன ஆரோக்கியத்தைப் பேணமுடியாமல் போனால், உடல் நலிவுறுவது இயற்கையே!. நலிவுறும் உடலையே தூக்கி நிறுத்தும் வல்லமை மன ஆற்றுப்படுத்தலுக்கும், மனத் தைரியத்துக்கும் உண்டு. இதைப் பொறுப்பானவர்கள் நன்குணர்ந்துகொள்ள வேண்டும்.

வீரமுழக்கங்களும், வீர வணக்கங்களும் அவர்களின் மன உணர்வுகளைத் தற்போது பிரித்துப்போடும் நிலையில் இல்லை. காரணம், அவர்கள் நோயினாலும், விழுப்புண்ணாலும், வறுமையாலும் நலிவுற்று இருக்கின்றனர். அவர்களுக்கு ஆக்ரோசமான பேச்சுகளையோ, வீர வசனங்களையோ கேட்கும் மனநிலை இல்லை. எனவே பொறுப்புடன் அவர்களின் மனதை அண்னமிக்கும் செயற்பாடுகளே தற்போது தேவையானவை. தாம் அனாதையாக்கப் பட்டுள்ளோம் என்ற உள்ளுணர்வு அவர்களிடம் இருப்பதை நான் நேரடியாக கண்டு, கேட்டு உணர்ந்துள்ளேன். ஆகையினால் அவர்களின் மனநிலையில், மாற்றத்தை ஏற்படுத்தி, உடல்நிலையைத் தேற்றிட நாம் முன்வர வேண்டும். ஒருசிலருக்கானது என்றில்லாமல், ஒட்டுமொத்தமாக அவர்களது உள நலனில் அக்கறை காட்ட வேண்டிய தலையாயக் கடமை இன்றைய எமது தமிழ்ச் சமூகத்துக்கு உண்டு.

அண்மையில் ஒரு முன்னாள் புலி உறுப்பினர் படுத்தப் படுக்கையாக தன் உடல் உபாதையோடு போராடும் விடயம் வெளிக்கொணரப்பட்டது. யுத்தம் முடிவடைந்தும் பல வருடங்களின் பின் இப்படி ஒரு உயிர் வாழ்வோடு போராடிக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டமை துரதிஷ்டவசமான விடயமே!. காலம் முந்திய நிலையில் அவர் கண்டறியப்பட்டு இருந்தால், அவரது வாழ்க்கை நிலைமையைக் கண்டிப்பாக மாற்றி அமைத்திருக்க முடியும். எனவே அவர்கள் தொடர்பில் பாராமுகமாக சமூகம் இருப்பது கவலைக்குரியது. குறிப்பிட்ட பல வருடங்கள் அவர்கள் உணவுக்கும், உடைக்கும் தமது தலைமையில் தங்கி வாழ்ந்தவர்கள். சுயமான பொருளாதாரம், வாழ்வியல் என்பது போராட்டத்துக்கு அடுத்த மாறுபட்ட படிநிலை. இதனை அவர்கள் யாதார்த்தமாக உணர்வது மிகவும் கடினமானது. முற்றிலும் மாறுபட்ட ஒரு வாழ்க்கையைச் சந்தித்தவர்கள் சமூகத்தின் தற்போதைய மாற்றத்துள் நுழைவது சவாலான விடயமே!.

இதனை சமூக ஆர்வலர்களும், பொறுப்புள்ளவர்களும் நன்கு உணர்ந்து, அவர்கள் தொடர்பில் கண்டிப்பாக கரிசனை கொள்ள வேண்டும். அவர்கள் வாழ்வியலை நுணுக்கமாக வழிப்படுத்த உறுதுணை புரிய வேண்டும். "சமூகத்துள் இணைப்பு" என்ற சொற்பதமே, அவர்களை பிரிவினைப்படுத்திய பின்பே சமூகத்துக்குள் நகர்த்தி இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றி, அவர்களின் உள, உடல் நலனில் கரிசனை கொள்ளல் மனிதப் பொது நீதியாக ஆகியுள்ளது.

தமது நிலைமை தொடர்பில் பலர் வெளிப்படையாக பேசமுடியாமல் உள்ளமையும், இங்கு நோக்க வேண்டிய விடயம். அரசியல் நகர்வு, சுதந்திரம் என்ற பக்கம் பார்க்காமல், சக சமூகமாக அவர்களை நோக்கும்போது, தனித்து அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் விசித்திரமாக உள்ளன. அவை, சமூக நிலையில் தாக்கம் செலுத்துவதை அவர்கள் உணராமலும் இல்லை. உதவி, வாழ்வு என்று அவர்கள் ஏமாற்றப்பட்ட கதைகளும் இல்லாமல் இல்லை. சமூகப் பொறுப்புணர்வு ஒன்று கண்டிப்பாக இவர்கள் தொடர்பில் ஏற்படுத்தப்படுதல் தற்போது இன்றியமையாததாக ஆகியுள்ளது.

**DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்
உணவுப்பொருட்களை மொத்தமாக
பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

StaR-Impex



**Lebensmittel Grosshandel e.K.**

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

Rabeena Since 1986 We've Mastered Taste
Aachi The Mother of Good Taste
BTM
Double Horse
Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்



MDH · Laziza International · Cock Brand · Daawat The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · Aroy-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila

இலட்சுமணன்

# இறுமாப்பின் கீழிறங்கல்

*2022* மார்ச் மாதம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமானதாகவே பார்க்கப்பட வேண்டும். ஏனெனில், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தனது இறுமாப்புத் தனத்தை சற்று கீழிறக்கி, சர்வக் கட்சி மாநாட்டைப் பலருடைய பகிஸ்கரிப்புகளுக்கு மத்தியில் நடத்தினார். மற்றையது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தார். இவை இரண்டுக்குமிடையில் பயங்கரவாதத் தடைச்சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இவைகள் அனைத்துமே கோத்தபாய ராஜபக்ச அனுராதபுரத்தில் சத்தியப் பிரமாணம் செய்து, ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற கீழிறங்கல்களாகவே கொள்ளப்படலாம். பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றவன் என்ற இறுமாப்பு காரணமாக, நாடு படு மோசமான பாதாளத்துக்குள் விழுந்து விட்டது. இதனைத் தூக்கி நிறுத்துவது என்னவோ குதிரைக் கொம்புதான். அந்த வகையில் அவரது முயற்சி வெற்றிக்காக இருப்பது நல்லதே.

இந்த நிலையில்தான் இன்றைய அன்றாடப் பிரச்சினைகளும், எதிர்கொள்ளலும், அரசியலை நடத்துதலும் என்ற பிரச்சினையாக இலங்கை அரசாங்கத்தினைக் கையில் வைத்துக் கொண்டிருக்கின்ற சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு முன்னே விசுவரூபம் எடுத்து நின்று கொண்டிருக்கிறது.

எந்த அரசியல் கட்சியினாலும் இன்னும் 10 வருடங்களுக்கேனும் நாட்டின் ஆட்சியை அசைக்கமுடியாது. இந்த நாட்டைக் கொண்டு நடாத்தக்கூடிய சக்தி மகிந்த ராஜபக்ஸ குடும்பத்திற்கே உள்ளது என்றுதான் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் சிலர்





வெளியேறி விட்டார்கள் என்பது வேறுகதை. ஆனால், அதற்கு அடுத்த தேர்தலின் போதுதான் மக்கள் பதிலைக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இன்னமும் பலருக்கு இருக்கிறது. இது நாடு சார்ந்த பொதுப் பிரச்சினைதான் என்றாலும், இலங்கையின் பொதுவான பிரச்சினைகள் பற்றி நாம் கலந்துரையாட வேண்டிய தருணங்கள் பல இலங்கையின் வரலாற்றில் உருவாகியிருந்தாலும், அந்தத் தருணங்களை யாரெல்லாம் திறமையாகக் கையாண்டிருக்கிறார்கள் என்பது தான் கேள்வி.

அன்றாட வாழ்வாதாரம் முதல், கல்வி வரை நாட்டின் அனைத்துத் துறைகளிலும் மக்களுக்குப் பிரச்சினைகள் உருவாகி விட்டன. உருவாகிய பிரச்சினைகளைச் சமாளிப்பதா? நாட்டின் சமூகம், பொருளாதாரம், சுகாதாரம், அரசியல் போன்ற பொதுப்பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதா? என்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் நிலை.

இந்த இடத்தில்தான் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி, எழுந்துவரும் எதிர்ப்பலையை சற்றுச் சமாளிக்கலாம் என்று ஜனாதிபதி சிந்தித்திருக்கிறார். அது நல்ல முடிவுதான். ஆனால் அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் நிறைவேறுமா? அந்த முடிவுகளால் உருவாகும் சூழல் மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்துமா? என்பது தெரியாததே!. அது ஒரு பக்கமிருக்க நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்ற, நாட்டின்



எதிர்காலத்துக்கு முக்கியமான துறையான அரசியல் பக்கம் ஜனாதிபதி கவனத்தினைச் செலுத்த வேண்டியக் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

அதன் படிநிலைதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பு. அது ஆரோக்கியமான முடிவுதான் இருந்தாலும், இதுவும் ஒரு ஏமாற்று வேலைதானா? என்று சந்தேகம் கொள்ள வேண்டியுமிருக்கிறது. ஆனால், ஒரு நிரந்தரமான தீர்வைத் தமிழர்களுடைய நீண்ட காலப் பிரச்சினைக்கு ஏற்படுத்தாத வரையில் இலங்கையில் அரசியல் குழப்பகரமானதாகவே இருக்கும் என்பதனை கோத்தபாய புரிந்து கொண்டாரா? என்று எண்ணவும் தோன்றுகிறது.

நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கும் முன்னுரிமையளிக்கின்ற மாற்றங்கள் இல்லாத, அனைத்து மக்களையும் கௌரவமானவர்களாகக் கொள்கின்ற சிறந்ததொரு அரசியலமைப்பு, மக்களைச் சிரமப்படுத்தாதச் சிறந்த பொருளாதாரக்



கொள்கை, சிறப்பான வெளிஉறவுக் கொள்கை, கல்விக் கொள்கை என எதனையும் வைத்திருக்காத நாடாகத்தான் இலங்கை இருக்கிறது.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் சிங்கள அதிகார வர்க்க ஆட்சியாளர்கள் 1948ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜா உரிமைச் சட்டத்தின் மூலமாக 10 இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையினைப் பறிக்கப்பட்டது. 1949 இல் வாக்குரிமைச் சட்டம் மூலமாக மலையகத் தமிழர்களின் அரசியல் அடிப்படை உரிமையான வாக்குரிமை பறிக்கப்பட்டது. 1964 சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக மலையகத் தமிழர்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படும் நிலை உருவாக்கப்பட்டது. 1956 தனிச்சிங்கள அரச கரும மொழிச்சட்டம், 1957- இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பாண்டா - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது.

1958 இல் தமிழ் மக்களுக்கு எதிராக இனவழிப்புகள், சொத்தழிப்புகள், கொள்ளையடிப்புகள் மேற்கொள்ளப் பட்டன. கல்லோயா, அல்லை- கந்தளாய், சேருவில, மணலாறு போன்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன. 1972 இல் சிங்களத்தினை மாத்திரம் அரச கரும மொழியாகவும், பௌத்தத்தை அரச மதமாகவும் கொண்ட முதலாம் குடியரசு யாப்பு கொண்டு வரப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1948 இல் இருந்து 30 ஆண்டுகளின் பின்னரும் நிராகரித்தது தான் வரலாறு. இதுவரை, எத்தனையோ வரைபுகள் முயற்சிக்கப்பட்டன. ஆரம்பத்தில், தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட தமிழ் தேசிய மொழி, வடக்கு கிழக்கில் நிருவாக மொழி தமிழ், நீதி பரிபாலன மொழி தமிழ், பல்கலைக்கழக அனுமதியில் தரப்புப் படுத்தலை நிறுத்தல், வடக்கு கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினைத் தவிர்த்தல், இனவிகிதாசார அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் நிராகரிக்கப்பட்டன.

அதன் பின்னரும், வட்ட மேசை மாநாடு, சர்வ கட்சி மாநாடு, மாவட்ட சபை முறை, திம்புப் பேச்சுவார்த்தை, மங்கள முனசிங்க ஆணைக்குழு, தீர்வுப்பொதி என எல்லாமே வெறும் முயற்சிகளாகவே இருக்கின்றன. கடந்த நல்லாட்சி காலத்தில் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர முடியாததாக ஆகிப்போனது.

1979இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்கக் கோரி இப்போதும் கையெழுத்துப் போராட்டத்தினை நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் இருக்கிறோம். அதனை நீக்குவதற்கு இன்னமும்தான் அரசாங்கங்களுக்கு மனமில்லை. ஆனால் திருத்தம் என்ற பெயரில் தமிழர்களையும், சர்வதேசத்தினையும் ஏமாற்றவே செய்கின்றனர்.

1983கறுப்பு யூலைக் கலவரத்தின் மூலமாகத் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்டவன்முறை இன அழிப்பாக மாறியது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டனர், சொத்துகள் கொள்ளையிடப் பட்டன, அழிக்கப் பட்டன. தமிழர்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாகத் துரத்தியடிக்கப் பட்டனர். வெலிக்கடைச் சிறைச்சாலையில் 52 தமிழ் அரசியல் கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பு விலக்கப்பட்ட நிலையில், சிங்களக் கைகதிகளால் கொடுமையான முறையில் கொல்லப்பட்டனர்.

70 வருடகாலமாக நடைபெறும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் எனும் இனப்பிரச்சினை நீண்ட நெடுங் கயிறாகவே இருக்கிறது. யாரைக் குற்றஞ் சொல்வது? என்று தெரியாமலேயே தொடரும் இந்த முயற்சியில் அலுத்து, சலித்துப் போய் ஒதுங்கிப் போனவர்கள் அதிகம் என்றிருக்கின்ற நிலையில், தமிழர்களின் ஏமாற்றம் இன்னமும் தொடரத்தான் போகிறது. அதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலே உள்ள நிலையில், மிதவாத

அரசியல்வாதிகளின் கைகளில் இருக்கின்ற தமிழர்களின் அரசியல் வெற்றியளிக்குமா? என்பதுதான் சந்தேகம்.

இதுவரையில் 20 திருத்தங்களைக் கண்டது நமது நாட்டின் அரசியலமைப்பு. இப்போதும் அரசியலமைப்பு மாற்றத்தினை நோக்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலும் கூட பூரணம் எனும் முழுமை கிடைக்குமோ என்பது சந்தேகம்தான். இவ்வாறான நிலையிலும், இந்த நாட்டில் எந்தவிதமான இனப்பிரச்சினையும் இல்லை என்று வெளிப்படையாகச் சொல்கின்ற ஜனாதிபதியைக் கொண்டவர்கள் தான் நாம். இப்படியிருக்கையில், தமிழர்கள் எவ்வாறெல்லாம் சிந்திக்க வேண்டும் என்பது முக்கியம்.

ஒரு பிரச்சினையை மறைப்பதற்கு இன்னுமொரு பிரச்சினை, அதனையும் மறைப்பதற்கு மேலும் பல என்பது மாறி, சமாளிப்புகளும் நடந்தேறுகின்றன. அதிலொன்றாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பு இருந்துவிடக் கூடாது. அதனை விடவும் இப்போது உருவாகியிருக்கின்ற தேசிய அரசாங்கம் என்ற சலசலப்பும் குழப்பமே!.

தமிழர் வரலாற்றில் ஏமாற்றங்கள் தவிர்க்கப்படமுடியாதவைகளாகவே இருந்திருக்கின்றன. நாட்டில் இதுவரை உருவான அரசாங்கங்கள், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துவிட வேண்டும் என்ற இதய சுத்தியான மனதுடன் முயற்சித்த வரலாறுகள் இல்லை. காலம் கடத்தல்களே அவர்களது இலக்காகும்.

இந்த இடத்தில், வெளிநாட்டமைச்சர் சொன்ன 'பழசைக் கிளறாதீர்கள்' என்ற கருத்தை நாம் நோக்குதல் வேண்டும். அவர் சொல்லிய 'பழசைக் கிளறாதீர்கள்' என்பதற்குள்ளேயே ஏதோ நடந்திருக்கிறது என்று ஏற்றுக்கொள்கிறார். அதற்கொரு தீர்வு வேண்டுமல்லவா?. ஒரு விடயத்திற்குத் தீர்விருந்தால் பரவாயில்லை. மறப்போம், மன்னிப்போம் என்று விட்டுவிடலாம். ஆனால் மன்னிக்கலாம், மறக்க முடியாது.



அவ்வாறானால், வரலாறே மறைந்து போகும்.

'இறுதி யுத்தத்தின் போது கைது செய்தவர்களைக் கொன்றோம்தான் மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று பகிரங்க மன்னிப்புக் கேட்டால், பிரச்சினை அத்துடன் முடிவுக்கு வந்துவிடும். 'பழசைக் கிளறாதீர்கள்' என்றால் அதன் அரத்தம் என்ன? என்பதும் இந்த இடத்தில் கேள்விதான். இதுவும் ஒரு ஏமாற்று முயற்சிதான் என்றே கொள்ளப்பட வேண்டும்.

ஏமாற்றங்கள் தமிழர் வரலாற்றில் மறக்கப்பட முடியாத, மாற்றப்பட முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது என்ற வகையில் தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - ஜனாதிபதி சந்திப்பு நடந்து முடிந்து விட்டது என்றாலும், எந்தவிதமான நல்லெண்ணத்தினையும் கடந்த இரண்டு வருடங்களில் காட்டாத ஜனாதிபதியுடன் முன்னெச்சரிக்கையும், முன்யோசனையும் அவரைக் கையாள்வது ஆபத்து என்ற விடயம் முன்னிற்கிறது. ஆரம்பத்தில் சொன்னது போல, ஜனாதிபதியினுடைய கீழிறங்கலாக இதனை நாம் கொள்ளாது, நம் முன்னெச்சரிக்கைகளையும், முன்யோசனைகளையும் முன்னிலைப் படுத்தியதாக வேண்டும்.

இதற்குக் கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில், ஏதோ சுதந்திரமே கிடைத்து விட்டது என்று தாண்டவக் கூத்தாடிய தமிழர்கள், அந்த அரசு இரண்டு ஆண்டைக் கடத்துவதற்குள் எல்லாம் தலைமுழுகிப் போனதை நினைவில் கொள்ளுதல் முக்கியமாகும். தமிழர்களின் ஏமாற்ற வரலாறும், இறுமாப்பு இறங்கிப் போனதாகக் காட்டுகின்ற ஜனாதிபதியையும் சமப்படுத்திப் பார்த்துக் கொள்ளுதல் மூலமே நகர்த்தப்படுதல் வேண்டும்.

இந்த இடத்தில்தான் ரெலோ அமைப்பின் ஜனாபதிபதியின் சந்திப்பு தொடர்பான எதிர்ப்பும், எச்சரிக்கையும், அவ் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகமும் தற்போதைய தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தாவின் பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட ஏனைய பிரதான அமைச்சர்களும் கைவிடுவார்கள் என்று எங்களில் யாராவது நம்பினால், அதைவிட அரசியல் அறியாமை வேறு இருக்கவே முடியாது என்ற கருத்தும் கவனத்திலெடுக்கப்படுதல் வேண்டும்.

இந்தவகையில்தான், நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பைப் பெரிதுபடுத்துதலும் கூடாது. சரியான முன்னெச்சரிக்கையான நகர்வுகளைக் கைவிடுதலும் கூடாது. காலத்தின் கட்டாயங்களுக்குள் நாம் அகப்படுவதனை விடவும் காலத்தினை நாம் கையாளுதலே சிறப்பு. இறுமாப்பின் கீழிறங்கள் தமிழர் தப்பை இழுத்து விழுத்தாதிருக்கட்டும்.




BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
Flugtickete und hotel kann man auch hier buchen
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR AIRWAYS القطرية
एअर इंडिया
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com


# நடராஜர் தோற்ற விளக்கம்

Smt. லிதியா மயூரன், சுவிஸ்



நடராஜர் தோற்றத்தின் பல்வேறு அம்சங்களுக்கான விளக்கங்களும், காரணங்களும் பழங்கதைகள் ஊடாகவும், தத்துவங்களாகவும் சைவ நூல்களிலே காணக் கிடைக்கின்றன. சிவனின் நடனத் தோற்றம் இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைக் குறித்து நிற்பதாகச் சைவ நூல்கள் கூறுகின்றன. உடுக்கை - படைத்தலையும், அடைக்கலம் தரும் கை - காத்தலையும், தீச்சுவாலை - அழித்தலையும், தூக்கிய கால்கள் - அருளல் ஆகிய முத்தி நிலையைக் குறிப்பதாகவும் கொள்ளப்படுகின்றது.

ஒற்றைக் காலில் நின்றாடும் போதும், நடராஜனின் தலை சமநிலையில் நேராக நிற்கிறது.



ஆடுவது தாண்டவமானாலும், சிற்சபை வாசனின் முகமோ சாந்த ஸ்வரூபம். இரண்டு காதுகளிலும் வளைந்த காதணிகள். வலது காதில் பாம்பு வடிவ வளையம். இடது காதில் கனிவாய் குழையும், தோடு வளையம். இந்த கோலத்திலும் உமையும் தன்னில் பாதி என்பதை இது உணர்த்துகிறது. முக்கண்ணனின் நெற்றியில், புருவங்களுக்கு மத்தியில், நெருப்பாய் எரியும் மூன்றாவது கண். முக்காலத்தையும் கடந்த ஞானத்தைக் குறிக்கிறது.

பொன்னம்பலவனின் ஆனந்த தாண்டவத்தில், பல திசைகளிலும் பறக்கிறது அவன் கேசம். கேசத்தி ஒரு சீராக முடிச்சுகளைக் காணலாம். அந்த கேச முடிச்சுகளில் கீழே உள்ளவற்றையும் பார்க்கலாம்!

அவற்றில், சேஷ நாகம்- கால சுயற்சியையும், கபாலம் - இவன் ருத்ரன் என்பதையும், கங்கை - அவன் வற்றா அருளையும், ஐந்தாம் நாள் பிறைச்சந்திரன் - அழிப்பது மட்டுமல்ல, ஆக்கத்திற்கும் இவனே கர்த்தா என்பதையும் குறிக்கின்றன.

பின் இடது கரத்தில் அக்னி, சிவன் - சம்ஹார மூர்த்தி என்பதை காட்டுகிறது. சிவாய நம என்னும் பஞ்சாச்சர மந்திரத்தின் (ஐந்தெழுத்து மந்திரம்) முதல் எழுத்தான 'ந' வைக் குறிக்கிறது இந்தக் கரம்.

ஊன்றி நிற்கும் அவனது வலது கால்களோ, 'ம' என்ற எழுத்தைக் குறிக்கிறது. மேலும் வலது கால், திரோதண சக்தியைக் காட்டுகிறது. இந்த

சக்தியால்தான் மனிதர் உயர் ஞானத்தைத் தேடலினால் அனுபவ அறிவாக பெறுகிறார்.

வலது காலின் கீழே இருப்பது ‘அபஸ்மாரன்’ எனும் அசுரன் - ஆணவத்தினால் மனித மனம் கொள்ளும் இருளைக் குறிக்கிறான். அவனோ நடராஜன் தூக்கிய இடது காலைப் பார்த்து இருக்கிறான் தஞ்சம் வேண்டி. தூக்கிய இடது கால், ஆணவம் மற்றும் மாயை ஆகியவற்றின் பிடியில் இருந்து விடுபட்டு, ஆண்டவனின் அனுக்கிரஹத்தினை அடைந்திட வழி வகை செய்யும்.

முன் இடது கரமோ, பஞ்சாக்ஷர மந்தரத்தின் அடுத்த எழுத்தான ‘வா’ வைக் குறிக்கிறது. இந்தக் கரம் யானையின் துதிக்கைபோல் இருக்க, தூக்கிய இடது காலைப் பாரும் - அங்குதான் மாயை அகற்றி, அருள் தரும் அனுக்கிரக சக்தி இருக்கிறதெனக் கை காட்டிச் சொல்கிறது.

பின் வலது கரம், பஞ்சாக்ஷர மந்தரத்தின் அடுத்த எழுத்தான ‘சி’ யைக் குறிக்கிறது. அந்தக் கையில்தான் உடுக்கை (டமரு) என்னும் ஒலி எழுப்பும் இசைக் கருவி. இந்த உடுக்கையின் ஒலியில் இருந்துதான் ப்ரணவ நாதம் தோன்றியது என்பார்கள்.

அடுத்தாக, ஆடல் வல்லானினின் முன் வலது கரமோ அபயம் அளித்து, ‘அஞ்சாதே’ என்று அருளும் காட்சி, பஞ்சாக்ஷர மந்திரத்தின் கடைசி எழுத்தான ‘ய’ வைக் காட்டுகிறது.

நடராஜனின் திருஉடலில் நாகம் ஒன்று தரித்திருப்பதைப் பார்க்கலாம். இந்த நாகம் - சாதரணமாய் சுருண்டு இருக்கும். யோகத்தினால் எழுப்பினால் உச்சி வரை மேலெழும்பிடும் குண்டலினி சக்தியைக் குறிக்கிறது. அவன் இடையைச் சுற்றி இருக்கும் புலித்தோல், இயற்கையின் சக்தியைக் காட்டுகிறது. அதற்கு சற்று மேலே கட்டியிருக்கும் இடைத்துணியோ அவன் ஆடலில், இடது பக்கமாய் பறந்து கொண்டிருக்கிறது!

பொன்னம்பலம் தன்னில் நின்றாடும் நடன சபேசனைச் சுற்றி இருக்கும் நெருப்பு வட்டம், அவன் ஞானவெளியில் தாண்டவாமடுவதைக் காட்டுகிறது. ஒவ்வொரு தீ ஜுவாலையிலும் மூன்று சிறிய ஜுவாலைகளைக் காணலாம். அதன் மேலே ‘மகாகாலம்’. அது, காலத்தின், தொடக்கம், நடப்பு மற்றும் முடிவுதனைக் குறித்திடும். நடராஜராஜன் நின்றாடும் ‘இரட்டைத் தாமரை’ பீடத்தின் பெயர் ‘மஹாம்புஜ பீடம்’. இந்த பீடத்திலிருந்துதான் அண்ட சராசரமும் விரிவடைகிறது.

**அடுத்த இதழில் நடனம் பயில தொடங்கும் முறை பற்றிப் பார்ப்போம்...**




# உளம்

## திறக்கும் உண்மைகள்

"உளம் திறக்கும் உண்மைகள்..." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### குட்டை!..

சத்தமின்றி இருந்தால்
சமுத்திரத்தைக் கூட
குட்டை என்று சொல்லும்
இன்றைய உலகம்!..

### மவுசு!..

தன்னடக்கத்துக்கு இடமில்லை
அலம்பல் பண்ணுகிறவர்களுக்கு
இன்றைய நம் சமூகத்தில்
மிக மிக அதிகமான மவுசு!..

### இருதலைக்கொள்ளி!..

உக்கிரைனுக்குள்
நுழைய முடியாமலும்
வெளியே நிற்க முடியாமலும்
இருதலைக்கொள்ளி எறும்பாக
அமெரிக்காவும்,
ஐரோப்பிய நாடுகளும்!..

### கவலை!..

சாப்பாடு கிடைக்காமல்
இருக்கிற கவலையைவிட
இருக்கின்ற சாப்பாட்டை
உண்ண முடியாமல் - இருக்கின்ற
கவலையே பெருங் கவலை!..

**வைரமுத்து சிவராசா,**
**யேர்மனி**

### முடிவே இல்லையா

யுத்தம் என்ற பெயரில்
யுகமே அழிகிறது.
பேராசை எதற்கு
பெரும் புகழ் எதற்கு.
யாரும் எதையும்
கொண்டு போவதில்லை.
இதை நினைத்தாவது
இனிமேலாவது திருந்தி வாழ்.
உன்னையும் திருத்திக் கொள்.
ஒற்றுமையாக உலகை
வலம் வரலாம்.
கொடுமையிலும் கொடுமை
மழை,வெள்ளம், புயல்
கொரோனா, அழிந்தது.
இப்போ போர் அழிக்கிறது
இதற்கு முடிவே இல்லையா?

**கெங்கா ஸ்ரான்லி**



### இயற்கை

இயற்கை வளங்களை
செழிக்க வைத்தால்
அவை நம்மை
செழிப்பாக
வாழ வைக்கும்.
இயற்கையை
நாம் அழிக்க நினைத்தால்
இயற்கை
நம்மை அழித்து விடும்.

**நந்து**



## அகர கவிக்களம்....

### விடிவிளக்கு

மாடத்தில் எரியும்
மணி விளக்கு
அல்லவே இது
என் தாய் வீட்டில்
காலத்திற்கும் அணையாது
எரியும் குப்பி விளக்கு

மின்விளக்கு அறியா
ஏழை வாழ்வின்
விடிவிளக்கு
இன்றும் சுடராய்....





### விதி

அன்று எம்மை
வீதியில் நிறுத்தியது விதி
வரிசையில் நிற்கவைத்து
பிரித்து பின் அம்மணமாக்கி
அறுத்து எறிந்தீர்
கேட்க நாதியற்று

இன்று எதற்கும் வரிசை
நாட்டில் கையேந்தியபடி
உயிர்ப்பிச்சைக் கண்ணீர்
காலத்திற்கும் நின்று
கொல்லும் மக்காள்....





### பசி..

உள்ளே உருகி
உருண்டும் பிரண்டும்
கண்ணீர் வழிபாடுகள்
பாலும் தேனும்
ஆறாய் சொரியும்
பூக்கள் கூட
ரோசாவும் தாமரையும்
பன்னீர் சந்தனம் சுகந்தம்
மனமோ பரவசம்

அர்ச்சனை எனும் பெயரில்
அர்ச்சகர் தட்டில் பணம்
நிறையும்
ஆங்காங்கே
சிறுதெய்வங்களின்
முன் உள்ள
உண்டியலும் நிறையும்
பின் படையலும் நடக்கும்

தெய்வம் வெளியே தெருவில்
கால்கடுக்க காத்திருக்கிறது
பற்றி எரியும் வயிற்றுடன்..

### ஆயுள்...

அந்தி சாயும் முன்
ஆற்றிலே ஒரு மீனாவது
பிடித்திட ஒற்றை கால்
கொக்காய் மனமும்

அக்கரையும் இக்கரையும்
அலையும் ஓடம்
அந்தியில் அனாதையாய்
கரை ஒதுங்கிக் கிடக்கும்
நிலையில் உடலும்...

● பாமினி

அன்புச் செல்வன்

இந்தியாவும், இலங்கையும் சம காலத்தில் பிரித்தானிய அரசிடம் இருந்து விடுதலை பெற்றன. இரண்டும் அடிமைப்பட்ட தேசங்கள். அந்த வகையில் இந்தியா, இலங்கையை விடவும் எந்த வகையிலும் உயர்ந்தது அல்ல. அதனால் அதற்குச் சிறப்பு அதிகாரங்கள் இருப்பதாக உலக அரங்கில் கருதப்பட முடியாது. கொலியாத் என்கிற ஒற்றை நெற்றிக் கண் இராட்சத அரக்கன் முன்னால், ஒரு சாதாரண ஆடுகள் மேய்க்கும் இடைப் பையன் உருவத்தைக் கண்டு தயங்கவும் இல்லை, பயந்து போரிடாமல் ஓடி ஒளியவும் இல்லை.

இதைத்தான் இந்த விவிலியக் கதை எமக்குப் பாடமாகத் தருகிறது. சிறு பையனான டேவிட் கவணில் வைத்து விட்டெறிந்த ஒரே கல், அந்த அரக்கனைக் கொன்று போட்டது. பருமன் அல்ல முக்கியம், கருமம்தான் முக்கியம் என்பதை சிங்களம் தொடக்கத்தில் இருந்தே தெரிந்து, இந்திய ஆட்சியாளரை கெஞ்சும் தேவைக்குக் கெஞ்சியும், மிஞ்சும் நேரத்தில் மிஞ்சியும் எல்லா நாடுகளின் கண்களுக்குள்ளும் தன் விரலை விட்டு, தனது காரியங்களை வெற்றிகரமாக சாதித்துக் காட்டி வருகிறது.

ஆனால் எங்கள் தலைமைகளின் பிச்சைக்கார அடிமைத் தனங்களை இந்தப் படங்களே காலம் காலமாக சொல்லி வருகின்றன. அவர்கள் நடத்திய கோமாளி அரசியலால், இன்று ஈழத் தமிழ் மக்களும், தாயக மண்ணும் ஒவ்வொரு நிமிடமும் முழுமையான நிரந்தர அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. யார்ப்பாண அரசு உட்பட 5 மகா வலிமை அரசுகளை இழந்து விட்டோம்.

இயக்கர் நாகர் என்கிற சிங்கள பௌத்த மத வரலாற்றுப் பதிவுகளில், ஆண்ட இனமாகப் பதிவு செய்யப்பட்ட வரலாற்று ஆவணங்களில், பெருமைப் படுத்த பட்ட இயக்கர் நாகர் என்ற இரு இனக் குழுக்களின் அடையாளங்களையும், அவர்களின் வழியாக நாம் ஆண்ட தாயக மண்ணையும் வந்தேறிய அந்நிய இனங்களின் வாரிசுகளின் சூழ்ச்சியால் பறிக்கப்பட்டு வந்தேறிகள் எனவும், தமிழ்ப் பயங்கரவாதிகள் எனவும் சர்வதேச நாடுகளின் உரையாடல்களில் 'தீண்டத் தகாத, பேசத் தகாத பறையர் சாதி எனப் பொருள் படும் படி சர்வ தேசப் பறையர்கள் *(INTERNATIONAL PARAIAHS)* எனவும், கூலி அடிமைகள் எனப் பொருள்படும் கூலிகள் *(COOLIES)* என்கிற நிலையிலும், *INTERNATIONAL TAMIL TERRORISTS* என்றும் உலகில் ஆபத்தானவர்கள் எனப் பெயரைப் பெற்றுள்ள இனமாக இழிவுபட்டுக் கிடக்க யார் கரணம்?





# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

## குடியுரிமை பறிக்கப்படும்போது பாராளுமன்றத்தில் இருந்த மலையக மக்கள் பிரதிநிதிகள்




இதற்கான முழுப் பொறுப்பையும் தமிழ் அரசியல் தலைமைகள், இந்திய அரசின் கூலிப் பிச்சைக் காரர்களாக செயற்பட்டமையே என்பதை இரு நாடுகளும் விடுதலை பெற்ற *1947* ஆம் அண்டு முதல், இன்று வரையான அரசியல் வரலாற்றில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

*1947*இல் நடந்த முதல் பாராளுமன்றத் தேர்தலில், கண்டி மாவட்டத்தில் *7* சிங்கள அரசியல்வாதிகள் தோல்வி அடையக் காரணமாக அம்மாவட்டத்தில் குடி உரிமையும், வாக்குரிமையும் கொண்டிருந்த இந்திய வம்சாவளிப் பெருந் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் ஒருமித்த வாக்களிப்பே காரணம் எனக் கூறி, கலவரங்களை சிங்கள அரசியல்வாதிகள் நடத்தினர்.

அதனைப் பலரும் வாய்ப்பாகப் பயன்படுத்தி, சிங்கள இனவெறியனான டி.எஸ். சேனாநாயக்க உடனடியாக இந்திய வம்சாவளித் தமிழர்களை நாடற்றவராக்கும் சட்டத்தை இந்திய, இலங்கை தமிழ் அரசியல் வாதிகளின் ஆதரவுடனே இயற்றி, *10* இலட்சம் தமிழர்களை வெளியேற்றி, தமிழர்களின் குடிப் பரம்பலைச் சிதைத்தான். இவற்றைச் சிங்களம் சிக்கலின்றி முடிக்க, தமிழ் கட்சித் தலைவர்களை முடக்கும் பணியில் இந்தியப் பிரதமர் நேரு செயற்பட்டார். அதன் விளைவாக இந்திய வம்சாவளி பா. உறுப்பினர்களே சட்டம் நிறைவேற்றப்படும் பொழுது, எதிர்ப்பின்றி ஆதரித்தனர். இதனை இந்தப் படம் குறிப்பிடுகிறது.

அதன் காரணமாக அதனை இந்திய மக்களின் பிரச்சினை என, இலங்கைத் தமிழர் தலைவர்கள் ஒதுங்கி விட, நேருவின் செல்வாக்கால் இலங்கை, இந்தியக் காங்கிரஸ் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டைமான் சிங்கள அரசுடன் ஆதரவாக நடந்து கொண்டார். அந்தச் சட்டம் புதிய இலங்கை அரசமைப்புச் சட்ட விதிகளில் *29*ஆவது உப விதிகளின் கீழ், சிறுபான்மை இன மக்களின் உறுதிப் படுத்தப் பட்ட உரிமைகளை மீறிய நிலையிலும், அதனைச் சட்டப்படி செல்லுபடி அற்றதாக்கும் பணியில், பிரபல சட்டவாதிகளான ஜீ.ஜீ. செல்வா, சுந்தரலிங்கம் போன்ற தமிழ் தலைவர்கள் ஊமைகளாக நடந்து, மறைமுகமாக ஆதரித்தனர்.

இதே கொள்கையை அவர்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்த காரணத்தால் '*1956*இல் தனிச் சிங்களச் சட்டம், *1971* அடிப்படை பாதுகாப்பு வசதிகள் அடங்கிய பழைய அரசமைப்புச் சட்டத்தை மாற்றி, சோஷலிசக் குடியரசு என்கிற பெயரில் பிரித்தானியாவின் கட்டுப் பாட்டிலிருந்த சிறுபான்மை மக்ளின் உரிமைகள், பாதுகாப்பை நீக்கி, தமிழ் மக்களைச்



சிங்களவரின் அடிமைகளாக நிரந்தரமாக மாற்றியது.

1982 இல் ஜே.ஆர். நிறைவேற்று அதிகார அரசமைப்பை உருவாக்கவும், தமிழரின் அரசியல் உரிமைகளை 6ஆவது திருத்தச் சட்டம் நிரந்தரமாகப் பறிக்கவும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்கிற மகா கொடூரச் சட்டத்தை நிறைவேற்றித் தமிழர்களின் அரசியல் உரிமைகளையும், உயிர்களையும், சொத்துகளையும், இன அழிப்பையும் செய்வதற்கு நேரு தொடக்கம், மோடி வரையாக உள்ள எல்லா இந்தியப் பிரதமர்களும், தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளும், தலைவர்களும் முழுமையான ஆதரவும், இராணுவ வசதிகள் வாய்ப்புகளைச் சிங்கள அரசுக்கு வழங்கி வந்தன. தொடர்ந்தும் வழங்கி வருகின்றன.

ஈழத் தமிழின அழிப்பை, இன்றுவரை நியாயப்படுத்தியும், தமிழர்களைப் பயங்கரவாதிகளாகப் பட்டியலிட்டும் வரும் நிலையிலும் கூட, எமது அரசியல் தலைவர்கள் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடியிடம் 1987இல் செய்யப்பட்ட ராஜீவ் ஜே.ஆர். இலங்கை இந்திய 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், சிங்களவர்களின் கொத்தடிமைகளாக ஒன்றிணைந்த அரசின் கீழ் தீர்வு வேண்டும் எனக் கேட்பதும் அல்லாமல், முழுத் தமிழ் மக்களையும், இந்திய இலங்கை ஆரியர்களின் அடிமைகளாக்கும் செயலைச் செய்வதை மானம், ரோசம் உள்ள எந்த மக்கள் இனமும் அனுமதிக்க முடியுமா? என முடிவு செய்யும் இறுதிக் கட்டத்தில் ஈழத் தமிழ் இனம் உள்ளது.

இது உலகத் தமிழ் மக்களும் தீவிரமாக கவனத்தில் எடுக்க வேண்டிய கேள்வியாகவும் உள்ளது. இவர்கள் எல்லாரும் எம் இனத்துக்கு வாய்க்கரிசி போட்டுத் தங்களையும், தங்களின் சொந்தங்களின் வாழ்வை வளப்படுத்தியவர்கள். 70 வருடங்களுக்கும் மேலாக செய்த மோசடி அரசியல் போதாது என்பது போல, இப்பொழுது மோடி அரசிடம் தமிழ் மக்களை மண்டி இட வைக்கிறார்கள். இதனை தமிழ் மக்கள் மிக உறுதியாக எதிர்த்துப் போர்க் குற்ற விசாரணை, மக்கள் கருத்தெடுப்பின் அடிப்படையில் உறுதியான, நிலையான அரசியல் தீர்வு காண்பது ஒன்றே கோரிக்கையாக வைக்க வேண்டும். இந்தியாவை ஈழத் தமிழினம் இன்னுமா நம்ப வேண்டும்?






யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2022ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும்
அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**கொரோனா கொரோனா எண்டு அலைஞ்சவனெல்லாம் இப்ப போர் போர் எண்டுகொண்டு திரியுறான். நாங்கள் என்ன பேசவேணும் எண்டதைக்கூட நாங்கள் முடிவு செய்யுறதில்லை. அதைக்கூட வேறுயாரோதான் முடிவு செய்கிறான் பாருங்கோ.**

வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்? நான் இப்பதான் கொஞ்சம் தெளிஞ்சு நிமிர்ந்து இருக்கிறன் பாருங்கோ. உடல் நலத்தால் மட்டுமில்லை பாருங்கோ, சுத்திவர நடக்கிற விசயங்களும் அதுக்குக் காரணம் பாருங்கோ. தமிழனை அழிச்ச அரசாங்கங்கள் எல்லாம், தங்களுக்குள்ள குத்தப்படுறது தொடங்கி, அதுவே மக்கள் போராட்டங்களாக மாறி நிக்குது. இப்பவும் தமிழருக்கு உரிமை குடுக்கவேணும் எண்டு யாரும் போராடேல்லை. இப்பவும் யாரோ சொன்னதைக்கேட்டு கோத்தா போ எண்டுகினமே தவிர, சொந்தப்புத்தியில இல்லை பாருங்கோ. சிங்களவர் எடுபிடிகள் எண்டுறது சாதாரண விசயம் தானே பாருங்கோ.

அது ஒருபக்கத்தால நடக்குது எண்டால், எங்கட ஆக்களும் திடீரென விழுந்தபாட்டுக்கு குறிசுடுகினம் பாருங்கோ. அவன் கோத்தா போ எண்டு கத்தினால், இவை பேசாமல் விடுப்பு பாக்குறதை விட்டுட்டு, அதைப்பார்த்து ஏதோ மோட்சம் வந்த கணக்கில குதிக்கினம் கண்டியளோ. சிங்களவன் ஒருபோதும் தன்ர மனோநிலையில இருந்து மாறப்போறதில்லை. ஆனால் தமிழர்கள் சிலருக்கும் இப்ப சிங்களவரின்ர புத்தி தான் வருகுது பாருங்கோ. அது எப்பிடி எண்டுறதுக்கு கிட்டடியில நடந்த சம்பவம் ஒண்டு சொல்லுறன் பாருங்கோ.

என்னுடைய ஊரைச் சேர்ந்த ஒருத்தர் இங்க ஐரோப்பாவில தான் இருக்கிறார் கண்டியளோ. அவரும் ஊரில போய் இருக்கப்போறன் எண்டு கனகாலமாச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். ஆனால் இன்னும் போன பாடில்லை. அதுகுமுதல் அவருக்கு ஒரு யோசனை ஓடியிருக்கு. என்னெண்டால் ஊரில போய் வெறுமனே காலாட்டிக்கொண்டு இருந்து சாப்பிடுறதை விட, ஏதாவது தொழில்செய்துகொண்டு இருந்தால் நல்லம் தானே எண்டு யோசிச்சிருக்கிறார் பாருங்கோ. அதனால ஏதாவது தொழிலுக்கு ஆயத்தப்படுத்துவம் எண்டு யோசிச்சு, ஊர்ல இருந்த தூரத்து உறவினர் ஒருவரைத் தொடர்பு கொண்டு என்ன

தொழில் செய்யலாம் எண்டு விசாரிச்சிருக்கிறார் பாருங்கோ. வெளிநாட்டில இருந்து ஒருத்தர் தொடர்பு கொள்ளுறார் எண்டால் பலரின்ர யோசனை என்ன செய்யும் எண்டுறது சொல்லியோ தெரியவேணும் பாருங்கோ. அந்தத் தூரத்து உறவினரும் பலவகைப்பட்ட தொழிலைச் சொல்லி இருக்கிறார். ஆனால் நம்மட ஆளுக்கு ஒண்டும் திருப்தியா அமைய வில்லை கண்டியளோ.

கடைசியில ஒருமாதிரி, பேருந்து ஒண்டு வாங்கி ஓடாவிட்டால் நல்லா உழைக்கலாம் எண்டு யோசிச்சிருக்கிறார் பாருங்கோ.அப்பிடியே பேருந்து விலை விசாரிச்சால் எல்லாம் கோடிக்குக் கிட்டமுட்ட போகுதாம். பரவாயில்லை, கெதியில உழைச்சு, போட்ட காசை எடுத்திடலாம் எண்டுறது நம்மட ஆளின்ர எண்ணமாக இருந்திருக்கு. அப்பிடியே அந்தத் தூரத்து உறவினரட்டச் சொல்லி, பேருந்து வாங்குற அலுவல் எல்லாம் பார்த்து, காசும் அனுப்பிப்போட்டார் கண்டியளோ. அங்க இருந்த அந்த உறவினருக்கு, இதுக்கு முதல் இப்பிடியான தொழிலில முன்பின் அனுபவம் இல்லை கண்டியளோ. பேருந்து வாங்க இவர் காசு கத்தை கத்தையா அனுப்ப, அவர் ஒரு தரகர் மூலமாக வாங்குறதுக்கு அலுவல் பார்த்திருக்கிறார் கண்டியளோ. ஆனால் தரகர் மூலமாகத் தான் பேருந்து வாங்குறது எண்ட விசயத்தை அவர் இவருக்குச் சொல்லேல்லை கண்டியளோ.

ஊரில இருந்த உறவினர் பிடிச்ச தரகர் தமிழ் பேசத் தெரிஞ்ச சிங்கள நபராம் கண்டியளோ. அதோட ஊருக்கு ஏதோ வியாபார அலுவலா வந்த இடத்தில, இரண்டுபேருக்கும் பழக்கமாம் பாருங்கோ. வெளிநாட்டில இருந்த என்ர உறவினர்தான் பேருந்து வாங்கக் காசு அனுப்புறார் எண்டு இவர் சொன்ன உடன, தரகருக்கு மூளை வியர்த்திட்டுதுபாருங்கோ. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இனி ஒருபோதும் நான் முதலாளி ஆகமுடியாது எண்டு யோசிச்சிருப்பான் போல கிடக்கு. உடனே தரகர் இவரின்ர உறவினருக்கும் ஆசை வார்த்தை காட்டியிருக்கிறார். இந்தப் பேருந்தை நீங்கள் வாங்குறதை விட, நாங்கள் இரண்டுபேரும் சேர்ந்து எங்கட பெயரில வாங்குவம் எண்டும், வெளிநாட்டில இருக்கிறவர் வந்து பாக்குறநேரம், வேறமாதிரிச் சமாளிக்கலாம் எண்டும் சொல்லி இருப்பான் போல கிடக்கு. அவன் அடிச்ச கதையில இவரும் நம்பி விழுந்திட்டார் கண்டியளோ. பேருந்து வாங்கக் காசனுப்புற சொந்தக்காரனுக்கு உண்மை சொல்லாமல், எங்கயோ இருந்து வந்த சிங்களவன் சொல்லுறதை நம்பி இவர் அவனுக்குப் பின்னால போயிருக்கிறார் கண்டியளோ.

காசு அனுப்பி அங்க பேருந்தும் வாங்கியாச்சு பாருங்கோ. பேருந்து இரண்டு பேரின்ர பெயரிலயும் பதிஞ்சிருக்கினம். ஆனால் இஞ்ச இருந்து காசு அனுப்பின என்னுடைய நண்பர் கேக்கேக்க, அது தனியத் தன்னுடைய பெயரிலே மட்டும்தான் பதிஞ்சிருக்கு எண்டு கதைவிட்டிருக்கிறார் உறவினர். இவரும் முழுதா அதை நம்பீட்டார் பாருங்கோ. பேருந்து வாங்கி, அதை ஓட்டுறதுக்கான வழித்தட உரிமம் வாங்குறதுக்கு இலட்சக்கணக்கில இலஞ்சம் குடிக்கவேண்டி வர, அதையும் இவரே அனுப்பியிருக்கிறார். அதுகூட உண்மையாக எவ்வளவு கட்டப்பட்டிருக்கும், அதில எவ்வளவு உறவினரும் அந்தச் சிங்களவனும் சுருட்டியிருப்பினம் எண்டுறது கூட நம்மாளுக்குத் தெரியாது கண்டியளோ. பேருந்து வாங்கின உடன அதை நிழற்படத்தில பார்த்ததும், பிறகு அது ஓடவெளிக்கிட்டுட்டுது எண்டதும் மட்டும்தான் நம்மாளுக்குத் தெரியும். மிச்சம் எல்லாம் உறவினருக்கே வெளிச்சம் கண்டியளோ.

பேருந்து ஓட வெளிக்கிட்டு, ஒருவருடத்துக்கு மேல ஆகீட்டுது

பாருங்கோ. நம்மட ஆள் ஊருக்குப்போய் பேருந்தைப் பார்த்து வர விரும்பியிருக்கிறார்.ஆனால் அவரின்ர உறவினருக்கு அது பற்றிச் சொல்லாமல் திடீரெண்டு போய் இறங்கியிருக்கிறார் கண்டியளோ. எந்த வழித்தடத்தில தன்ர பேருந்து ஓடுது எண்டு ஆசையாய் வெளிக்கிட்டு, உறவினருக்குத் தொடர்பெடுத்தால், உறவினர் ஏதோ விழுங்கி விழுங்கி கதைச்சிருக்கிறார். நம்மட ஆளுக்கு ஒண்டும் பிடிபடேல்லை. நேர உறவினரின்ர வீட்டுக்கே போயிருக்கிறார். அங்க போய் பேருந்து பற்றி கேட்க, உறவினர் சிங்கம் முழுசத் தொடங்கீட்டுதாம். என்ன விசயம் எண்டு தெரியாமல், பதிலுக்கு இவர் முழுச, உறவினருக்கு வியர்க்க வெளிக்கிட்டுட்டுதாம்.

அப்பதான் இதுக்குள்ள ஏதோ சிக்கல் இருக்கெண்டு நம்மட ஆளுக்கு உறைச்சிருக்கு. சரி, எங்க பேருந்து எண்டு கேட்டால், அது ஓடுது எண்டாராம் உறவினர். பேருந்து ஓடாமல் பின்ன என்ன பறந்தே போகும் எண்டு நம்மட ஆள் கடுப்பில வெடிச்சிருக்கு. எங்க ஓடுது எண்டு கேட்டால் ஏதோ சிங்கள ஊரைச் சொன்னாராம் உறவினர். அடேய் எங்கட ஊரில ஓடத்தானே நான் பேருந்து வாங்கினனான், நீ ஏன் சிங்கள ஊரில ஓடவிட்டனி எண்டு இவர் கேக்க, அது அங்கதான் இலகுவா வழித்தடம் கிடைக்கும் எண்டிருக்கிறார். சரி; ஓடத்தொடங்கி ஒருவருடம் ஆச்சு, காசுக்கணக்கு வழக்கு எல்லாம் எங்க எண்டு கேட்டால் அது வந்து, இது போய்.. எண்டு இழுக்க நம்மட ஆளுக்கு கோபம் வந்திட்டுது பாருங்கோ.

ஆளுக்கு வந்த கோபத்தில பக்கத்தில இருந்த சிறிலங்கா காவல் துறை அலுவலகத்தில முறைப்பாடு செய்திருக்கு. முறைப்பாடு செய்தபிறகு, உறவினரோடு சேர்ந்து பேருந்தை வாங்கி குளிர்காயுற அந்தச் சிங்களவரும் காவல்துறை அலுவலகத்துக்கு வந்திருக்கிறார். வந்தாலும் வந்தார், அவன் போட்ட குண்டு அணுகுண்டு பாருங்கோ. பேருந்து வாங்குறதுக்கு நம்மாளின்ர உறவினர் காசு தந்தது




உண்மைதான், ஆனால் அதைக் கடனாகத்தான் தந்தவர், தந்த கடனில அரைவாசி நான் கட்டிப்போட்டன், மிச்சத்தை விரைவில கட்டிப்போடுவன் எண்டு அவன் காவல்துறைக்குச் சொல்லச் சொல்ல, நம்மட ஆளுக்கு இரத்தக்கொதிப்பு ஏறி, மயக்கம் வந்திட்டுது பாருங்கோ.

இவரின்ர உறவினருக்கு இவர் காசு அனுப்பினதுக்கு இவரட்ட ஆதாரம் இல்லை. அவர் அங்க எடுத்ததுக்கும் ஆதாரம் இல்லை, பேருந்து வாங்க அந்தச் சிங்களவனுக்கு காசு குடுத்ததுக்கும் ஆதாரம் இல்லை. அவன் இவையிட்ட காசு வாங்கினத்துக்கும் ஆதாரம் இல்லை. அப்பிடியிருந்தும் அவன் காசு வாங்கியதாக உண்மை சொல்லுறான், அதனால அவனை நம்பலாம் எண்டுறது காவல்துறையின் கருத்தாக இருக்குதாம். பேய் ஆளும் நாட்டில் பிணம் தின்னும் சாத்திரங்கள் எண்டுற மாதிரி, சிங்களவனுக்கு ஒத்தூதுற மாதிரித்தானே சிங்களக் காவல்துறை இருக்கும் கண்டியளோ.

நம்மட ஆள் இனி என்ன செய்யுற எண்டு தெரியாமல் இஞ்ச திரும்பி வந்திட்டார் பாருங்கோ. இதுக்கு இனி வழக்குப் போட்டு, அதுக்கு அலையுறது வீண்செலவு எண்டு இவருக்கு யோசனையாக இருக்குது பாருங்கோ. இவர் வழக்குக்காக காசு செலவழிச்சு இலங்கைக்கு வந்துபோக மாட்டார் எண்டுறது இவரின்ர உறவினருக்கும் நல்லாத் தெரியும் கண்டியளோ. மொத்தத்தில் நம்மட ஆள் பைத்தியம் பிடிக்காத குறையாத திரியிறார் பாருங்கோ.

சொந்தக்காரனை நம்புறது தப்பில்ல பாருங்கோ. ஆனால் நாங்கள் அவையை நம்புறம் எண்டு அவைக்கு நம்பிக்கை வராமல் பாத்துக்கொள்ளவேணும் கண்டியளோ. என்ன குழப்புறனே, நல்லாக் குழம்புங்கோ, அப்பதானே தெளிவு பிறக்கும்.

பணத்தின் மீதுதான் பக்தி என்றபின்
பந்த பாசங்மே ஏனடா
பதைக்கும் நெஞ்சினை
அணைக்கும் யாவரும்
அண்ணன் தம்பிகள் தானடா
அண்ணன் தம்பிகள் தானடா

- அப்ப வரட்டே






மனோ

# இன்னொரு இனஅழிப்பை நோக்கி உலகம் செல்கிறதா..?

2009 ஈழத் தமிழினப்படு கொலைகளை இலங்கையின் சிங்கள பௌத்த இனவெறி அரசுகளை முன்னிறுத்தி, ரஷியா அமரிக்கா இந்தியா உட்பட 40 வரையான நாடுகள் நடத்தக் காரணமானது ரஷியாவின் தூண்டுதலால் இந்திய அரசு என்பது வரலாற்று உண்மை. இலங்கை இந்திய இருநாடுகளும் 1900 முதலாக பிரித்தானிய அரசிடம் இருந்து விடுதலை பெறப் போராடிய பொழுது, இந்தியத் துணைக் கண்டத்தை மதங்களின் அடிப்படையில் பாக்கிஸ்தான், இந்தியா, கிழக்குப் பாக்கிஸ்தான் என மூன்று அரசுகளாகப் பிரித்துச் சுதந்திரம் வழங்கிய பிரித்தானிய அரசு.

இலங்கையில் மட்டும் மொழியாலும், மதத்தாலும், இனத்தாலும் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தன்னாட்சி இறைமை அனுபவித்தத் தமிழர்களின் யாழ்ப்பாணம், வன்னி, கண்டிய, கோட்டை, உரோகணம், களனி அரசுகளான 6 அரசுகளை ஒன்றாக்கி, விடுதலை வழங்கிய முட்டாள் தனத்தை செய்தது. இன்று ரஷியா உக்கிரெயின் மீதான தனது ஆதிக்கத்தை நியாயப் படுத்துவதைப் போன்றே, இந்தியா ஈழத் தமிழின அழிப்பைச் சிங்களத்துடன் செய்து வருகிறது.

வரலாறு திரும்பும் என்கிற தத்துவத்தை, வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றும், கூறியும் வருகிறார்கள். இத்தனைக்கும் தமிழர் தம்மைத் தனித்த பூர்வக் குடிகளாக, இறைமை கொண்ட மக்களாக அரசிடமும், அரசியல் அரங்குகளிலும், ஆவண ரீதியாகவும் 6.01.1938இல் யாழ்ப்பாணத்தில் வெளியான இந்து சாதனம் பத்திரிகையில் வெளியான 25.07.1938இல் திரு.சின்னத்துரை மற்றும் பலர் கையொப்பமிட்டு, சோல்பரி ஆணைக்குழுவிடம் சுவிஸ் நாட்டின் சமஸ்டி முறையிலான அரசமைப்பைக் கோரி இருந்தனர்.

இதற்கும் முன்னதாக 1927ல் கண்டிப் பிரதேச மக்கள், தமக்குத் தனியரசு வேண்டும் எனக் கோரியிருந்தனர் என்கிற தகவல்களைக் கலாநிதி முருகர் குணசிங்கம் எழுதிய, 'இலங்கையில் தமிழர்' என்கிற வரலாற்று நூலில் பக்கம் 528ல் குறிப்பிட்டுள்ளார்.

இதே நூலில் 534வது பக்கத்தில், 'அனைத்து இலங்கைப் பூர்வ குடிகள் அமைப்பின் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளர் திரு.எம். கணபதிப் பிள்ளை, அச்சங்கத்தின் தீர்மானமாகத் தமிழருக்கானத் தனித் தமிழ் அரசும், தனியான ஆளுநரும் வேண்டும் என 01.03.1940ல் யாழ்ப்பாணத்திலிருந்து, ஆங்கிலத்தில் இலண்டன் குடியேற்ற நாடுகளின் செயலருக்கு கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

இது போன்ற பல சூடான வாதப் பிரதிவாதங்களைத் அக்காலத்தில் தமிழர்களின் தலைவர்களால் வைக்கப் பட்டிருந்த நிலையில்,

பிரித்தானிய அரசு எல்லா இனங்களையும், பிரதேசங்களையும் சிங்கள இனத்திடம் ஒப்படைத்ததை வரலாறு தவறு எனச் சுட்டிக் காட்டுவது போல, சிங்களம் 1910 தொடக்கம் இன்றுவரையும் செய்து வரும் தமிழ் இன அழிப்பு உறுதி செய்து வருகிறது.

வரலாறு திரும்பும் என்கிற தத்துவத்தை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றும் கூறியும் வருகிறார்கள். சாரத்திலும், காரத்திலும் இரண்டும் ஒன்றுதான். ஈழம் இந்தியாவின் கண்களை மௌரிய மன்னன் அசோகன் ஆட்சிக் காலத்தில் புத்த மதம் பரப்புவதாகத் தனது படைத் தளபதி தலைமையில் அநுராத புர மன்னன் சூரத் தீசன் என்கிற தமிழரசன் மீது படை எடுத்த பொழுது, சூரத்தீசன் தனது தலைநகரான அநுராத புரத்தை விட்டு, மிகிந்தலை மலைப் பகுதியில் ஒளிந்து கொண்டான். அங்கு தேடிப் பிடித்து வந்து, புத்த மதத்துக்கு மாற்றி, தேவ நம்பிய தீசன் எனப் பெயர் மாற்றி, அரசனாக்கிய வரலாற்றை சிங்கள பௌத்த நூலான மகாவம்சம் மற்றும் ஏனைய பிற சிங்கள நூல்களும் குறிப்பிடுகின்றன.

சுதந்திரமான, மதச் சார்பற்ற, சிங்கள இன வெறி அற்ற பதிவுகள் இல்லாத காரணத்தால் உலக வரலாற்றாசிரியர்கள் இக்கதையை நிகழ்வுகளை, வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு உறுதிப்படுத்த முடியாத காரணத்தால் ஏற்றுள்ளார்கள். ஆனால், இன்றைய சிங்கள இனவாதிகள், பௌத்த மத வெறியர்கள் இவற்றை மறைத்தும், திரித்தும் தமது பிரச்சாரங்களைக் கட்டமைத்து வருகின்றனர். அவர்களின் ஒரே இலக்கு முழு இலங்கையும் சிங்களவருக்கும், சிங்களப் பௌத்தர்களுக்கும் மட்டுமே என்கிற பார்வையில் கடந்த 100 வருடங்களுக்கு மேலாக, 1910 தொடக்கம் தமிழின அழிப்பை நடத்தி வந்துள்ளனர்.

2009 முள்ளிவாயக்காலில் 20 நாடுகளுக்கும் அதிகமான உலக அரசுகள், சிங்களத்துடன்





இந்திய அரசின் முதல் இலங்கை வடமாகாண பொம்மை முதல் அமைச்சர்.

இணைந்து நடத்திய தமிழ் இனப் படுகொலைகள், ஆயுதப் போரியலின் உச்சக் கட்டம் என்றால், அதன் பின்னர் இராணுவ அடக்குமுறை ஆட்சிக்குள் தமிழ் ஈழம் வதைபடுவது முடிவற்ற தொடர் துயரங்களின் மனித அவலங்களின் ஒட்டு மொத்த சோகக் கதையாக உள்ளது.

தமிழ் ஈழத்தின் தலைவிதியை மாற்றியவர்கள் ஐரோப்பியர்கள். குறிப்பாக 1833இல் நிர்வாக வசதிக்காக தமிழரின் பூர்வீக தாயக மண்ணையும், சிங்களவரின் தேசத்தையும் ஒன்றாக இணைத்து ஒரே தேசமாக 1947இல் நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கும் பொழுது, முழு நாட்டையும் சிங்களவரின் தலைமையில் ஒப்படைத்து விட்டுச் சென்றனர்.

அப்பொழுது தமிழ் மக்கள் உட்பட அனைத்து சிறுபான்மை இன மக்களுக்கும் சமவாய்ப்பு, சமநீதி உட்பட சிங்கள மக்களுக்கு உள்ள எல்லா உரிமைகளும் கிடைக்கும் வகையில், உத்தேச புதிய அரசமைப்பில், சட்டப் பாதுகாப்பு விதிகள் உள்ளடக்கப்பட்டு எல்லா இன மக்களின் ஒப்புதலுடன் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தின் கீழ் டொமினியன் எனப்படும் ஆட்சி அதிகாரம், சிங்களத் தலைவர்கள் வழங்கிய பல வாக்குறுதிகளின் அடிப்படையில் நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கப் பட்டது.

அதே ஆண்டில் புதிய பாராளுமன்றத்துக்கான தேர்தலில் குடியுரிமையும், வாக்குரிமையும் பெற்ற மலையக இந்திய வம்சாவழித் தமிழர்கள், கண்டி மாவட்டத்தில் 7 பாராளுமன்றப் பிரதிநிதிகளின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக வாக்களித்திருந்தனர். கண்டி மாவட்டத்தில் தமிழ் இனத்துக்கு இப்படி ஒரு பலத்தைச் சகிக்காத சிங்கள அரசியல்வாதிகள், பெரிய ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனால் அன்றைய பிரதமரான டி.எஸ்.சேனாநாயக்கா அரசியல் அமைப்புச் சட்ட விதிகளை மீறி, சிறுபான்மை

மக்களுக்கு எதிரான சட்டத்தை நிறைவேற்றி, இந்திய வம்சாவழித் தமிழர் அனைவரின் குடிஉரிமை, வாக்குரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவராக்கி இந்தியாவுக்கு அனுப்ப வழி செய்தார்.

இன்று உக்கிரெயின் மக்கள் எவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி, இன அழிப்பை எதிர் கொள்கிறார்களோ, அதே நிலையில் ஈழத் தமிழ் மக்களும், 1948 தொடக்கம் கடந்த 74 வருடங்களாக சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் இன ஒழிப்பை எதிர் கொண்டு வருகின்றனர். உக்கிரேயின் ரஷியாவின் பாதுகாப்புக்கு மிக முக்கியமான நிலப் பரப்பு. இந்தியாவுக்குத் தமிழ் ஈழ நிலப்பரப்பு மிக அருகில் இருப்பது போல இல்லாமல், உக்கிரயினின் எல்லை ரஷிய நாட்டுடன் தரை வழியாக உள்ளது. இங்கே இடையில் 26 மைல் கடல் உள்ளது.எனவே, இந்தியாவுக்கு ஏற்படக் கூடிய பாதுகாப்பு நெருக்கடியை விடவும் ரஷியாவின் பாதுகாப்பு உக்கிரெயினின் பாதுகாப்பிலும் நடு நிலையிலும் தங்கி உள்ளது.

இன்று உக்கிரெயினில் அமெரிக்கா மேற்குலக மற்றும் வட அத்திலாந்திக் ஐரோப்பிய நாடுகளின் கைக்ககூலியாக உக்கிரெயின் அதிபர் செலன்ஸ்கி போன்று, தமிழமீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் செயற்படாத காரணத்தால், திருட்டு முழி முழிக்கும் இந்தியாவின் நிலை ரஷியாவுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அது தனது தேசப் பாதுகாப்புக் கருதி, இன்று ரஷிய அதிபர் புடின், பிரபாகரனைப் போன்று உறுதியுடன் உலக அரசுகளை எதிர்த்துப் போரிடும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்.

அன்று ஈழத்தில் இந்திய அரசின் கைப் பாவையாகச் செயற்பட்டவர் திரு.வரதராஜப் பெருமாள் என்கிற இந்திய வம்சாவழித் தமிழர். இன்று அவர் மக்களாலும், அரசுகளாலும் கைவிடப்பட்டு அரசியல் அநாதையாக 2009க்குப் பின்னர் நாட்டில் அப்பப்போ அரசியல் பேசி, வாழ்க்கையை ஓட்டி வருகிறார். அப்படித்தான் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்த செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச் சந்திரன், டக்லஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் போன்ற புலிகளை எதிர்த்துப் போராடி, தமிழ் இன அழிப்பைச் செய்ய உதவிய அல்லக் கைகளை யாரும் கவனிப்பதே இல்லை.

இன்று உக்கிரெயினில் அதிபராக பதவி வகிக்கும் வொலோடிமிர் செலென்ஸகி யூத பரம்பரையைச் சேர்ந்தவர் என்றும், அமெரிக்க நேட்டோ நாடுகளின் ஆதரவால், திடீரென அரசியல் அதிகாரத்தை ரஷிய ஆதரவாளரான அதிபர் 2014ல் வெளியேற்றப் பட்டதால் அதிபராகி, ரஷியாவுக்கு எதிரான அரசியலை முன்னெடுப்பதோடு, ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ மற்றும் அமெரிக்க இஸ்ரேலிய நாடுகளுடன் இணைந்து, உக்கிரேயின் நாட்டை ரஷியாவின் தேச நலன்களுக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தும் நபராக மாறி, ரஷியாவின் பகைமையைத் தேடியதால் போர் மூண்டுள்ளது.

இந்தப் போரை இரு நாடுகளின் பிரச்சனையாக கருதாமல், உலகப் போராக மாற்ற அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றிய மற்றும் நேட்டோ நாடுகள் ஆயுத தலையீட்டை நியாயப்படுத்தும் வேலைகளுக்கு, உக்கிரெயின் நாட்டை பயன்படுத்த லெவன்ஸ்கி கூலிப் படைத் தலைவராக செயற்படுகிறார் என்பதே ரஷிய அதிபர் புடினின் முக்கிய குற்றச் சாட்டு. அக்குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்தும் வகையில் அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளும் ரஷியாவுக்கு எதிரான பல வர்த்தக பொருளாதாரத் தடைகளை உலக அளவில் செயற்படுத்துவதில் இருந்து அறிய முடிகிறது.

ரஷியாவும், ஈழத் தமிழ் இன அழிப்புப் போரில் தமிழரை அழிக்க உதவிய நாடுதானே!. நாம் எப்படி அதனை ஆதரிக்கலாம்? எனக் கேள்விகள் எழுவது நியாயமே!. உலகம் எப்பொழுதும், எங்கோ போரை நடத்தவே செய்யும். அதனால் நியாயங்களும், அறமும், மனிதாபமும் அழிந்து மறைவதை எப்படி ஏற்க முடியும்?. உலகில் எந்த இனம், எப்படி மாறினாலும், தமிழனின் அறவாழ்வு மாறாது, அழியாது. அந்த அறம்தான் 2009 முள்ளி வாய்க்கால் கொலைகளை நினைவூட்டும் வகையில், உக்கிரெயின் ரஷயப் போர் தொடங்கி விட்டது.

இப்பவே இலங்கை, இந்திய அரசியலில் பிரபாகரனும், 2009 முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலைகளும், கொழும்பிலும், புது டில்லியிலும் மற்றும் உலக அரசியல் அரங்குகளில் பேசு பொருளாக எத்தனையோ பேரின் வயிற்றெரிச்சலைக் கிளப்பும் வகையில், சிங்கள மக்கள் மத்தியில் அதிரவுகளைக் கிளப்பி வருகிறது. அறம் கூற்றாகம் என்பது தமிழரின் நம்பிக்கை. என்றுமே அந்த நம்பிக்கை வீண்போகாது


32வது ஆண்டில்...
ORIENT
Textiles and Jewellery
Special OFFER
2022ஆம் ஆண்டிற்கான
புத்தம் புதிய
வரவுகளுடன் தொடரும்
மலிவு விற்பனை!
சிறுவர்களுக்கான
ஆடை வகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
உரிமையாளர் : S. ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel : 0231 16 23 77,
Fax : 0231 14 78 36
31 ஆண்டுகளாக எம்மோடு பயணித்த அனைத்து
வாடிக்கையாள அன்பர்களுக்கும் எமது நன்றிகள்





## மண்டியிடும் கோட்டா...
## சண்டைக்கு அழைக்கும் சஜித்



# சோமாலியாவாக மாறிவரும் இலங்கை

**"நாடு இன்று எதிர்கொண்டிருக்கிற நெருக்கடி, ஆயுத மோதல்கள் இடம்பெற்ற காலத்தைவிட ஆபத்தானது" என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறியிருக்கின்றார்.**

ராஜபக்ஷர்களை நாட்டின் காவலர்களாகவும், அபிவிருத்தியின் நாயகர்களாகவும் முன்னிறுத்தி, ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்களில் கம்மன்பிலவும் முக்கியமானவர். ஆனால், இன்றைக்கு அவர் ஆயுத மோதல்கள் குறிப்பாக, விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் நாடு எதிர்கொண்ட நெருக்கடியைக் காட்டிலும் ஆபத்தானதொரு நிலை ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

அத்தோடு, "எரிபொருட்கள், மருந்துப் பொருட்கள் என்பவற்றை அத்தியாவசிய தேவையாக முன்னிறுத்தி, அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக ஆப்பிள், தோடம் பழங்களை அத்தியாவசியமாகக் கருதி இறக்குமதி செய்ய வேண்டியதில்லை" என்றும் தெரிவித்திருக்கின்றார்.

கம்மன்பில, மேற்கண்டவாறு கூறிக் கொண்டிருந்த நாளில்தான், கொழும்பு உள்ளிட்ட நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு

நிலையங்களின் முன்னாலும், வாகன வரிசைகள் மணித்தியாலக் கணக்கில் நீண்டிருந்தது. அதுபோல, நாடு ஏழரை மணிநேர மின்வெட்டுக்குள் செல்வதான அறிவிப்பும் அரசாங்கத்தால் விடுக்கப் பட்டது.

நாட்டின் மின்சாரத் தேவையின் பெரும்பகுதி, அனல் மின்நிலையங்கள் மூலமே நிவர்த்தி செய்யப்படுகின்றது. அனல் மின்நிலையங்களை இயக்குவதற்கு டீசல் அவசியமானது. ஆனால், நாட்டில் நான்கு நாள்களுக்குத் தேவையான டீசலே கையிருப்பில் இருப்பதாக, துறைசார்ந்த அமைச்சரான கம்மன்பில கூறியிருக்கின்றார். இவ்வாறான நெருக்கடி நிலை நீடிக்குமாக இருந்தால், நாடு முழுநாளும் மின்வெட்டை சந்திக்க வேண்டியேற்படும்.

வடக்கு - கிழக்கில் ஆயுதப் போராட்டம் நீடித்த காலப்பகுதியில் முழுநேர மின்வெட்டு இருந்தது. அதாவது அரசாங்கம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்குவதை முழுவதுமாகத் தடை செய்திருந்தது. பொருளாதாரத் தடையின் ஒருபகுதியாக, மின்சாரத் தடையும் அமுலாக்கப்பட்டது அதனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த பெருமளவான மக்களுக்கு மின்தடை பழக்கமானது.

ஆனால், தென் இலங்கை மக்களுக்கு இவ்வளவு நீண்ட நேர மின்வெட்டு புதியது. அவர்களால் அதைச் சமாளிக்கவே முடியவில்லை. கடந்த 30 ஆண்டுகளில், இவ்வளவுக்கு நீண்ட மின்வெட்டு அமுலாகவில்லை என்று தென் இலங்கை மக்கள் குறைப்படுகிறார்கள்.



ராஜபக்ஷர்கள் நாட்டின் பொருளாதாரத்தை செங்குத்தாகத் தூக்கி நிறுத்துவார்கள் என்கிற தோரணையில், ஊடகங்களில் முழங்கிய கோட்டாவின் 'வியத்கம' நிபுணர்களைக் காணவே கிடைக்கவில்லை. அவர்களில் பலரும், நாட்டிலிருந்து வெளியேறிச் சென்று விட்டார்கள்.

ஆட்சி, அதிகாரத்தை அடைவதற்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் கருவியாக முன்னெடுக்கும் தரப்புகள், நாட்டை எங்கே கொண்டு சென்று நிறுத்துவார்கள் என்பதற்கு, ராஜபக்ஷர்களும், அவர்களுக்காக ஒத்தூதிய தரப்புகளும் சான்று.

"நாடு இன்று எதிர்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு, முன்னைய அரசாங்கங்களின் முறையற்ற பொருளாதாரக் கொள்கைகளும் ஆட்சியுமே காரணம்" என்று, ஜனாதிபதி கோட்டா குற்றஞ்சாட்டுகின்றார். அவர் அப்படி குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் போது, அருகில் மஹிந்த அமர்ந்திருக்கின்றார்.

2005 முதல் 2015 வரையான சுமார் பத்து ஆண்டுகளை மஹிந்த தலைமையிலான ராஜபக்ஷர்கள் ஆட்சி செலுத்தினார்கள். அந்த ஆட்சியில் மஹிந்தவுக்கு அடுத்த அதிகார நிலையில் கோட்டா, பாதுகாப்புச் செயலாளர் எனும் பொறுப்பில் இருந்தார். ஒரு கட்டத்தில் நகர திட்டமிடல் அமைச்சையும் அவர் தனக்கு கீழ் கொண்டு வந்தார்.

ராஜபக்ஷர்களின் முதல் ஆட்சிக் காலத்தில், அதிக நிதி ஒதுக்கப்பட்ட துறைகளாக பாதுகாப்பு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, நகரத் திட்டமிடல் அமைச்சு ஆகியன இருந்தன. இந்த அமைச்சுகளை கோட்டா, பசில் ஆகியோர் கையாண்டார்கள். இந்தத் துறைகளிலேயே அதிக ஊழல் இடம்பெற்றதென குற்றச்சாட்டுகளும் உண்டு. ஆனால், அவற்றையெல்லாம் மறந்து நின்று கோட்டா, முன்னைய ஆட்சிகளில் பழியைப்போட்டு தப்பிக்க நினைக்கிறார்.

கோட்டாவின் முன்னைய ஆட்சிகள் மீதான பழி சுமத்தல் குறித்து, கேள்வி எழுப்பியிருக்கிற மனோ கணேசன், "கப்பல்களே வராத ஹம்பாந்தோட்டைத்


துறைமுகத்தையும், விமானங்களே பறக்காத ஹம்பாந் தோட்டை விமான நிலையத்தையும், போட்டிகளே இடம் பெறாத சர்வதேச கிரிக்கெட் மைதானத்தையும் அமைத்தது யார்? கமிஷன்களுக்காக ராஜபக்ஷர்களே அமைத்தார்கள்" என்கிறார்.

மனோ கணேசனின் கேள்வியை யாராலும் தட்டிக்கழிக்கவே முடியாது. ராஜபக்ஷர்களின் காலத்தில், யானைகள் அதிகம் வசித்த ஹம்பாந்தோட்டைக் காடுகளை அழித்து, அபிவிருத்தி என்கிற போர்வையில் பில்லியன் கணக்கில் நிதியை வீணடித்திருக்கிறார்கள். பொருளாதார அறிவு கிஞ்சித்தேனும் இருந்திருந்தால், ஹம்பாந்தோட்டையில் இவ்வாறான திட்டங்களை யாரும் முன்னெடுத்து இருக்கமாட்டார்கள்.

ஒரு தெளிவுக்காக, ஹம்பாந்தோட்டை விமான நிலையத்தை வெளிநாட்டுப் பயணங்களுக்காக அல்லது பொருட்கள் ஏற்றுமதி - இறக்குமதிக்காக, எந்தப் பகுதி மக்கள் அதிகமாக பயன்படுத்துவார்கள் என்று பார்த்தால், ஹம்பாந்தோட்டை, அம்பாறை உள்ளிட்ட மாவட்ட மக்களைக் கொள்ளலாம்.

நாட்டின் பொருளாதார மத்திய நிலையங்களும், தொழிற்பேட்டைகளும் அதிகமுள்ள மேற்கு வலயம், மத்திய வலயம் உள்ளிட்டன எந்தவிதத்திலும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தினதோ, விமானநிலையத் தேவைகளையோ பெறத் துணியாது.

ஏனெனில், கொழும்போடு ஒப்பிடுகையில் ஹம்பாந்தோட்டைக்கான போக்குவரத்துச் செலவு அதிகமானது. அதுபோல பயண நேரமும் விரயமாகும். இவற்றையெல்லாம் சிந்திக்காது, ராஜபக்ஷர்களாகிய தங்களின் சொந்த மாவட்டம் என்கிற ஒரே காரணத்துக்காகவும், ஊழல் செய்வதற்காகவுமே ஹம்பாந் தோட்டையில் துறைமுகமும், விமான நிலையமும் அமைக்கப் பட்டிருகின்றன. முதலீடு என்பது, வருமானம் ஈட்டும் வழிமுறைகளை அடையாளம் கண்டு செய்யப்பட வேண்டியது. இல்லையென்றால், நாட்டு மக்கள் மீது தேவையற்ற பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தும்.



ராஜபக்ஷர்களின் கடந்தகால ஆட்சியில் வீண்விரயம் ஆக்கப்பட்ட இவ்வாறான பல நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றுக்காக எல்லாமும் சேர்த்து, மக்கள் நெருக்கடியை நாளாந்தம் சந்திக்க வேண்டியிருக்கின்றது.

அபிவிருந்தி அடைந்துவரும் நாடு என்கிற நிலையிலிருந்து, மூன்றாம் நிலையை நோக்கி நாடொன்று சென்று கொண்டிருப்பதற்கான தற்போதையை உதாரணமாக இலங்கையை சொல்லலாம். ஏனெனில், மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு என்கிற காரணங்களால் விவசாயம், மீன்பிடி தொடக்கம் நாட்டின் அனைத்துத் தொழில் துறைகளும் முடங்கிப் போயிருக்கின்றன.

இவ்வாறான நிலையில், வேலை நாள்களின் எண்ணிக்கையை நான்கு நாள்களாகவும், அதிலும் காலை 09 மணி தொடக்கம் 03 மணி வரையான ஆறு மணி நேரமாக சுருக்கவும், அரசாங்கத்திடம் மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் ஆலோசனை வழங்கி இருக்கின்றார்.

உலகத்திலேயே அதிக விடுமுறை உள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை முன்னிலையில் இருக்கின்றது. அப்படியான நிலையில், வேலை நாள்களையும், மணி நேரத்தையும் குறைக்கும் ஆலோசனையை எவ்வாறான அணுகுமுறையாக எடுத்துக் கொள்வது? என்று தெரியவில்லை. இப்படியான சிந்தனைக்காரர்கள்தான் ராஜபக்ஷர்களைச் சுற்றி இருக்கிறார்கள். இது தொடர்ந்தால் சோமாலியா, எத்தியோப்பியாவின் நிலையை இலங்கை அடைவதற்கு அதிக நாள்கள் எடுக்காது.




Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
**EO Tychboden Parkweg 2**
**4665 Oftringen**
வெகுவிரைவில்...

# IMPOrtas

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

**மொத்த விற்பனை நிலையம்**

Schwaresterstrasse 2, 5604 Hendschiken

Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

*கடந்த ஒரு மாதகாலமாக இலங்கையர்கள் மௌனமாக துயரில் சிக்குண்டு அனைவரும் துயர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எல்லாவற்றையும் மீறிய சமீபத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அப்பாவி மக்களின் துயரங்களும், நியாயமற்ற ஒடுக்குமுறையுமே காரணம். இந்த நுகேகொட மிரிஹானவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற வேட்பாளர் ஒருவர் இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*கடந்த 2015 ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தேசிய பட்டியலிலிருந்து ஜே.வி.பி.யால் முன்மொழியப்பட்ட வேட்பாளரொருவர், இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட படம் அரசாங்கத்திடம் இருப்பதாகவும் தெரிவிக்க ப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களிடம் இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்த போதிலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்துவதற்கு குறைந்தபட்ச பலத்தை பிரயோகித்ததாகவும், அதாவது பின்னிரவு ஒரு மணியளவில் தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.*

*மிரிஹானை போராட்டத்தின் காரணமாக 39 மில்லியன் ரூபா பெறுமதியில் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சிரேஷ்ட காவல்துறை பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தில் 53 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 18 விசேட அதிரடிப்படை அதிகாரிகள் உட்பட 24 காவல்துறையினர் காயமடைந்துள்ளனர். சம்பவத்தின் போது பொதுமக்கள் 15 பேர் காயமடைந்து களுபோவில, ஸ்ரீஜயவர்தனபுர மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.*

*வியாழக்கிழமை இடம்பெற்ற அமைதியின்மை போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட 15 பேர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் மீதான விசாரணை கங்கொடவில நீதிமன்றில் நீண்ட நேரமாக முன்னெடுக்கபட்டிருந்தது. இந்த நிலையில், 400 சட்டத்தரணிகள் பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையாகியிருந்ததுடன், இலங்கையில் இதுவே பிரதிவாதிகள் சார்பில் அதிகமாகக் கூடிய சட்டத் தரணிகள் முன்னிலையான முதலாவது சந்தர்ப்பமாகும் எனத் தெரியவருகின்றது.*

*இதன்போது, நீதிமன்றில் வெள்ளிக்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்ட 21 பேரில் 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 6 பேர் பொலிஸாரினால் அடையாள அணிவகுப்பு உட்படுத்த வேண்டும் என கோரிக்கை*



முன்வைத்தமைக்கு அமைவாக 6 பேர் எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். எனினும் இந்தத் தாக்குதல் ஆர்ப்பாட்டத்தைத் திட்டமிட்ட அடிப்படைவாத குழுவே கலவரத்தில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக, ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அரபு வசந்தம் ஏற்பட வேண்டும் என கோரி அடிப்படைவாதிகள் இவ்வாறு போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை இந்தப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களுக்குத் தண்டனைச் சட்டம் மற்றும் பொதுச் சொத்துகள் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் தொடர்பான வழக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடரப்படாது எனவும், சிரேஷ்ட ஊடக பேச்சாளர் அஜித் ரோஹன



தெரிவித்துள்ளார். “இந்த ஆர்ப்பாட்டத்தை அடிப்படைவாதமாகவோ, தீவிரவாதமாகவோ கருதக்கூடாது” என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையொன்றில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு கூறுவதன் மூலம் இந்த நிலைமை மேலும் மோசமடையும். இது விரக்தி அடைந்த மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டமாகும். அரசாங்கம் இதனை உணர வேண்டும். அடுத்தவாரம் நாடாளுமன்றை கூட்டி, பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகளை அடைவதற்கு சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.




சண் தவராஜா

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ரெலோவும்





வவுனியாவில் நடைபெற்ற தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த எம்.சுமந்திரன், கூட்டமைப்பில் இருந்து ரெலோ வெளியேறுவதைத் தமது கட்சியில் உள்ள பலரும் விரும்புவதாகத் தெரிவித்து இருந்தார். அவருக்குப் பதில் கூறும் விதத்தில் கருத்துத் தெரிவித்த ரெலோ அமைப்பின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன், 'கூட்டமைப்பைப் பற்றிக் கருத்துக் கூற சுமந்திரனுக்கு அனுபவம் போதாது' என்ற தொனியில் பேசியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்தத் தலைவராக வரக் கூடியவர் எனக் கருதப்படும் எம்.சுமந்திரன் வெளிப்படையாகப் பேசும் தமிழ் அரசியல்வாதிகளுள் ஒருவர். அத்தகைய தன்மை காரணமாக அவர் அதிக நண்பர்களையும், அவர்களை விட அதிகமாக எதிரிகளையும் சம்பாதித்து வைத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அவர் இளையவராக இருந்த போதிலும், கூட்டமைப்பின் பேச்சாளராக உயர்ச்சி பெற்ற அவர், தற்போதைய தலைவர் இரா.சம்பந்தன் முதுமை காரணமாகத் தளர்ந்து போயுள்ள நிலையில், கூட்டமைப்பின் செயற்பாட்டுத் தலைவராகவும் விளங்கி வருகின்றார்.

சிறிலங்கா அரசுத் தலைமை முதல், பன்னாட்டுத் தலைவர்கள் வரை அவரையே தொடர்பு கொண்டு செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் அளவிற்கு அவரின் வளர்ச்சி உள்ளது. அரசியல் தலைவர்கள் மாத்திரமன்றி உள்ளூர், வெளியூர் ஊடகங்களும் கூட சுமந்திரனை நாடும் நிலையே உள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆலோசகராகக் கட்சியினுள் வருகை தந்த சுமந்திரன் விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றினுள் பிரவேசித்து, தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். தேசியப் பட்டியல் தொடர்பான விமர்சனங்களை முன்வைத்து, அவரது அரசியல் எதிரிகள் அவரைக் கிண்டல் செய்த போது, தேர்தலில் நேரடியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்று தனது நிலையை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டார். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அவர் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட போது, எதிர் அணியில் இருந்தவர்கள் மாத்திரமன்றி, அவரது கட்சிக்குள் இருந்த ஒருசிலர் கூட அவரைத் தோற்கடிக்கச் செய்வதில் முனைப்புக் காட்டியமை ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல.

சுமந்திரன் அவர்கள் ஆற்றலாளர் என்பதில் அவரது எதிரிகளுக்குக் கூட மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்பதே உண்மை. ஆனால், அவரது அரசியல் எழுச்சிக்கு அவர் தேசியப் பட்டியல் ஊடாக மேற்கொண்ட நாடாளுமன்றப் பிரவேசமே பெரிதும் காரணமாக இருந்தது என்பதையும், அந்தத் தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெறுவதில் அவர் 'வெறுப்பைக் கக்கும்' ரெலோவின் வாக்குகளும் அடங்கியிருந்தன என்பதையும் அவர் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் கூட யாழ் மாவட்டத்தில் ரெலோ சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் வாக்குகளும் சேர்ந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான

வெற்றியாளர்களுக்கான எண்ணிக்கையைத் தீர்மானித்து இருந்தது என்பதையும் சுமந்திரன் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சுமந்திரனின் கருத்துக்குப் பதில் கூறும் விதத்தில் செல்வம் அடைக்கலநாதன் வழங்கியிருந்த செவ்வியில் “கூட்டமைப்பில் உருவாக்கத்தில் ரெலோவின் பங்கு எத்தகையது என்பதை அதன் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்” என்ற தொனிப்பட தெரிவித்திருந்தார். அவர் குறிப்பிட்ட கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுள் நானும் ஒருவனாக இருந்தேன் என்ற அடிப்படையில், இது தொடர்பில் பேசும் தார்மீக அடிப்படையிலான கடப்பாடு எனக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன்.

சிதறிக் கிடந்த தமிழ்க் கட்சிகளை ஒன்றாகத் திரட்டி ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை பலருக்கும் இருந்திருக்கலாம். ஆனால், அதற்குச் செயல் வடிவம் தந்தவர்கள் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் ஒரு சிலரே என்பதை, உண்மையை அறிந்தவர்கள் உணர்வர். குறிப்பாக இத்தகைய கருத்தைத் தெரிவித்த உடனேயே, அதனைப் புரிந்து கொண்டு, ஊடகவியலாளர்களைத் தட்டிக் கொடுத்து, பின்னாளில் கூட்டமைப்பு உருவாகி வெற்றிபெறக் கடுமையாக உழைத்த தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, அவருக்கும் பக்க பலமாக நின்ற முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கூட்டமைப்பின் உருவாக்கம் தொடர்பான வரலாற்றை நன்கு அறிந்தவர்கள்.

இவர்களுள் ஒருவர் இன்று உயிரோடு இல்லை. மற்றவரின் பேச்சைக் கேட்கும் நிலையில் இன்று பலர் இல்லை. (2000ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் திகதி மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கின் போதே கூட்டமைப்பு ஒன்றின் அவசியம் பற்றி முதன்முதலில் பேசப்பட்டது.)

மாவை மற்றும் ஜோசப் ஆகியோர் ஒரு பாரம்பரியமான அரசியல் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தவர்கள். கூட்டமைப்புக்குள் வருவதற்காக அவர்கள் எந்தவொரு பிரத்தியேக தியாகத்தையும் செய்யவில்லை. ஆனால், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரின் நிலைமை அவ்வாறு இருக்கவில்லை. கூட்டமைப்பு உருவான காலகட்டத்தில் ரெலோ மற்றும்



ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய இயக்கங்கள் சிறிலங்கா இராணுவத்தோடு இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்தன.

மாதா மாதம் அவர்களுக்குப் பெருந் தொகைப் பணம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அது மாத்திரமன்றி அவர்களிடம் ஆயுதங்களும் இருந்தன. நேற்றுவரை விடுதலைப் புலிகளின் எதிரிகளாக இருந்தவர்கள், புலிகளின் ஒத்துழைப்புடன் உருவாகப் போகும் ஒரு அமைப்பில் இணைந்து கொள்ள பல 'தியாகங்களைச்' செய்ய வேண்டி இருந்தது.

முதலாவதாக, அவர்கள் தங்கள் உறுப்பினர்களைச் சமாதானப் படுத்த வேண்டியிருந்தது. அடுத்ததாக தங்கள் நடவடிக்கை காரணமாக அரசாங்க உதவியை இழக்க வேண்டிய நிலையில், தமது உறுப்பினர்களின் செலவுகளைப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அடுத்து தம்மிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய தேவை இருந்தது. கூட்டமைப்பை உருவாக்குவதில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இருந்தாலும், அவர்களை முழுமையாக நம்ப முடியுமா? என்றதொரு கேள்வி, அடிப்படை உறுப்பினர்கள் மத்தியில் இருந்தது. அது மாத்திரமன்றி, முன்னாள் இயக்கங்களை 'கொலைப் பட்டியலில்' இருந்து விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள்ள ஒரு சாராருக்கு பரிபூரண விருப்பம் இருக்கவில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக ரெலோ சார்பில் ஆரையம்பதி பிரதேச சபையின் தவிசாளராக இருந்த ரொபர்ட் நவரெத்தினராசா, கூட்டமைப்பின் உருவாக்கம் நிகழ்ந்து கொண்டிருந்த காலப்பகுதியிலேயே விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமையைக் குறிப்பிட முடியும்.

இத்தனையையும் தாண்டியே ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எப். உம் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளாக மாறின. ஈ.பி.ஆர்.எல்.எப். தற்போது வெளியில் நின்றாலும், ரெலோ தொடர்ந்தும் கூட்டமைப்பிலேயே இருந்து வருகின்றது. அது மாத்திரமன்றி அதன் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் தான் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று வருகின்றார். மாறாக, கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா போன்றோர் தொடர்ச்சியாக வெற்றிபெற முடியாமல் போய் விட்டவர்கள் என்பதையும் சுமந்திரன் நினைவில் கொள்ள வேண்டும்.

கூட்டமைப்பை உருவாக்க நினைத்தவர்களின் நோக்கம் சிதறிக் கிடந்த தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரட்டி, தமிழ் மக்களின் குரலை ஏகோபித்த குரலாக மாற்ற வேண்டும் என்பதன் அடிப்படையிலானது. அதனை சுமந்திரன் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால், அவரது கட்சியில் உள்ள யாராவது அவருக்கு அதனை நினைவுப்படுத்தினால் அவருக்கும் நல்லது. தமிழ் மக்களுக்கும் நல்லது.



24 மணிநேர
தகவல் உதவிச்
சேவையுடன்

V BOX



**300 க்கும் மேற்பட்ட Channels மற்றும் 5,000க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்**

**இப்போது அனைத்து நாடுகளிலும்**




வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

## REACH OUR DISTRIBUTORS

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780



சிறுகதை

# பூரணி

"எடி.. பூரணி எழும்பிடி! விடிஞ்சி ஏழு மணியாச்சிது.. இன்னும் சுருண்டு புரண்டு கிட.. பார்க்கிற சனங்கள் சிரிக்கப் போகுதுகள்.." பாக்கியம் ஆச்சி தினமும் பாடும் பல்லவிதான் இது. ஆனாலும் இன்று அதில் சிறிது செத்தல் மிளகாயின் காரம் செறிந்திருந்தது. சுருட்டை ஆழமாய் உள்ளுக்குள் இழுத்துக் கொண்டு, தொடர்ந்து ஒருமுறை தொண்டை அதிரும்படி கரித்துப்பினாள். பெரிய பனை ஓலை கடகப் பெட்டியை எடுத்து எதையோ பக்குவமாக நிரப்பத் தொடங்கினாள்.

"சும்மா கிடணை.. ஆச்சி..! நான் முழிச்சிற்றுத்தான் அண்ணையைப் பற்றி யோசிச்சிக் கொண்டு கிடக்கிறன். நீ முதலில வெயில் ஏறமுதல், ரவுனுக்குப் போயிற்று பொழுது படமுதல் வரப்பார்.!" பூரணி இப்போது சோம்பல் முறித்து எழுந்து சுவரோடு சாய்ந்துகொண்டாள்.

"ஓம்.. ஓம்.. நீ கொண்ணையை நினைக்கிறியா.. இல்ல.. யேர்மனியில கட்டப்போறவனை நினைக் கிறியா எண்டது எனக்கென்ன தெரியாதா?" என்று மனதுக்குள் நக்கலாகச் சொல்லிக்கொண்டாள் பாக்கியம் ஆச்சி. இப்போது கோழி முட்டை, மரக்கறி, பழவகைகளைக் கடகத்தில் அடுக்கி நிரப்பியிருந்தாள். இனி திரிகோணமலைக்குக் கிளம்பினால் சரி. இது ஆச்சியின் வாரா வார வாடிக்கையான வியாபாரம். ஆலங்கேணியிலிருந்து கிண்ணியாத்துறை வரை கால் நடையாக வருவாள்.

துறையடியிலிருந்து பின்னர்தான் வாகன வசதி. பாக்கியம் ஆச்சி பூரணியையும், பரதனையும் இப்படித்தான் தொழில் பார்த்து வளர்த்து ஆளாக்கினாள். அவர்களின் பெற்றோர் குழந்தைப் பருவத்திலேயே செல்லடியில் பலியாகிக் காலமாகி விட்டனர். பரதன் படிப்பில் படு சுட்டி; திருமலை இந்துக் கல்லூரியில் படித்தான். அப்போதுதான் தமிழ் போராளிகள் குழுக்கள் வாலிபர்களை உள்வாங்கின. பரதனும் அதில் இணையப் போவதாக புரளி எழுந்தது. ஆச்சி அப்போது உசாரானாள். சொத்து பத்துகளை விற்றும், கடன் பட்டும் பிரயாண முகவர் மூலம் ஒருவழியாக யேர்மனிக்கு ஒரே தள்ளில் தள்ளிவிட்டாள்.

தற்கால வதிவிட அனுமதி கிடைத்தாலும், வாய்த்த ஏதாவது வேலைகளைச் செய்து சம்பாதித்தான். அவன் தனது கூட்டாளி ஒருவனைப் பூரணிக்கு பேசிமுடித்து, பயண முகவர் மூலம் எடுக்க, எல்லா ஒழுங்கும் செய்துவிட்டான். பயண நாட்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். பூரணி தினமும் வெளி நாட்டுக் கனவில் மிதந்தாள்.

"எடி.. மோளே..!. இதை வந்து தலையில தூக்கி வை..!"

உறக்கத்தில் கலைந்திருந்த உடையைச் சரிப்படுத்திக்கொண்டு, ஒரு கை கொடுத்து பெட்டியைத் தூக்கிவிட்டாள். பெட்டியைச் சாவகாசமாக தலையில் வாங்கியபடி ஆச்சி குசுகுசுத்தாள்..

"புள்ள..! அவன் கணேசன் மூதூரிலிருந்து மதியம்மட்டில் வருவன் எண்டவன். பாவம் பொடியன், அங்க என்னத்தச் சாப்பிடுவானோ? வந்தால், சோறு தண்ணி ஏதாச்சும் சாப்பிடக் குடு. எப்ப இனித் திரும்ப வருவான் எண்டதையும் கேட்டுவை. நான் போயிட்டு வாறன். கவனமாய் இரு.." ஆச்சி செருமிக்கொண்டே வெத்திலையைச் சப்பிக்கொண்டு நடையைக்கட்டினாள்.

கணேசன் என்று ஆச்சி குறிப்பிட்டது வரதனின் கூட்டாளி கணேசன். அவன் மூலமே வரதன் வெளி நாடு போக முடிந்தது. அவன் போனதும் கணேசன் முழு நேரப் போராளியாகி விட்டான். கணேசனைத் தெரியாதவர்கள் திருமலை, மூதூர், தம்பலகமம் பகுதிகளிலேயே கிடையாது. பரதனுடன் சேர்ந்து போக கணேசனுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், விடுதலை வேட்கையால், இயக்கப் பணியில் முற்றாய் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

முதியவர்களிடம் மரியாதை காட்டியும், தன்னொத்தவர்களிடம் நட்புப் பாராட்டியும், இளையோரிடம் பாசம் காட்டியும் விடுதலைப்பணியைச் சிரம் மேற்கொண்டு நடத்தினான். ஈழ விடுதலைக்கு எதிரானவர்களிடம், குறிப்பாக சகோதர இனத்தாரிடம் ஒட்டுறவாய்ப் பழகி அவர்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றிருந்தான். எந்தச் சமுதாயப் பிரச்சினைகள் என்றாலும் சரி, அவற்றில் தலையிட்டு சரியான நீதியை வழங்கினான். திருமலை மாவட்டத்திலேயே மிகவும் முக்கிய புள்ளியான கணேசன் எதிரிகளுக்கு சிம்ம சொற்பனமாக விளங்கினான். அவன் மோதாத படைப் பிரிவே இல்லையெனலாம். அவன் எந்தக் களமுனையிலும் தோற்றதுமில்லை; பின்வாங்கியதுமில்லை.

நேற்று நடுச்சாமம், புதிதாகப்பயிற்சி பெற்றுவந்த சிறு போராளிக் குழுவை மூதூர் பகுதிக்குக் கூட்டிக்கொண்டு பணியில் ஈடுபடுத்திவிட்டு, மீண்டும் தம்பலகாமம் திரும்ப வேண்டியவன், ஆலங்கேணி ஊடாகவே போயாகவேண்டும். விடுதலைப் பயணத்தில் முழுப்பங்காற்றிய ஆலங்கேணி அவன் பிறந்து வளர்ந்த ஊர்; தங்குமடம் மாதிரி. அதிலும், பாக்கியமாச்சியையோ, பூரணியையோ பார்க்காமல் ஒருபோதும் போகவே மாட்டான்.

அவனது வாய்க்குச் சுவையாக உணவுப் பண்டங்களை ஆச்சி செய்து வைத்துக் காத்திருப்பாள். ஆற அமர இருந்து சாப்பிடாது விட்டாலும், பொட்டலமாய் கட்டிக் கொடுத்து விடுவாள். அவனுடன் எத்தனை போராளிகள் வந்தாலும், எந்தச் சரிசாமமாக இருந்தாலும் அலுப்புச்சலிப்பு இல்லாமல் எதையாவது சமைத்துப் போடுவாள் புண்ணியவதி. அவர்களும் கஞ்சியோ, கூழோ மகிழ்ச்சியாக புசித்துப் பசியரிச் செல்வார்கள். இன்றும், இன்னும் சிறிது வேளையில் கணேசன் பசியுடனே வருவான்.

***

ஆச்சி போனவுடன், கழுவவேண்டிய சமையல் பாத்திர பண்டங்களைக் கழுவி கவுட்டுவிட்டு, வேப்பங்குச்சியை ஒடித்து பற்களைத் துலக்கத் தொடங்கினாள் பூரணி. பச்சைப் பசேலென்று சிலுசிலுக்கும் தென்னங்கீற்றுக்களை ஊடறுத்துப் பாய்ந்த காலை இளம் வெயில் பூரணியின் கன்னக்கதுப்புகளில் பட்டு கதகதப்பாக்கிற்று.

முகத்தை அலம்பி முருகனைத் துதித்தாள். முற்றத்தை பெருக்கலாமென விளக்குமாற்றை எடுத்தபோது, எங்கிருந்தோ பறந்து வந்த சோடி மைனாக்கள், முத்தத்து தென்னங்கீற்றில் வந்த மர்ந்து சொண்டுடன் சொண்டு உரசி தென்றலில் ஊஞ்சலாடின.

அவற்றின் "கியாவா.. கியாவா.." என்ற காதல் கீச்சலொலி பூரணியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது; மெய்மறந்து போனாள். ஏக்கப்பெருமூச்சு இயல்பாய் வெளிப்பட, ஆதங்கத்தோடு அவற்றை பொறாமையுடன் பார்த்தாள். தன்னிலை மறந்த மனம், இலையுதிர் காலச்சருகாய் அலைபாய்ந்தது. அவிழ்த்து விட்ட கன்று தாய் பசுவிடம் தாவி ஓடுவது போல, அவள் மனம் யேர்மனிக்குத் தாவியது.

தினமும் தபால்காரனை எதிர் பார்த்து ஏமாந்தாள். அவளும் ஆசா பாசங்களுக்கு அடிமைப்பட்ட சராசரிப் பெண்தானே. அதுவும் போர்ச்சூழல் நிறைந்த தமிழர் பகுதிகளிலிருந்து, புலம் பெயர்ந்தாலே போதுமென்ற ஆதங்கம். ஆனால், ஆச்சியைப் பற்றித்தான் கவலைப்பட்டாள்.

அடுத்த இதழில் தொடரும்...



# உளவு நிறுவனங்கள்

போராளிக் குழுக்களுக்கு தனது ஒற்றர்களை அனுப்பி, போராளிக் குழுக்களின் நடவடிக்கையை அவதானித்தது மட்டுமல்ல, போராளிக் குழுக்களுக்குள் யார் பெரியவர்? என்ற போட்டி மனப்பான்மையை உருவாக்கிய இந்திய உளவு நிறுவனம், தனது ஒற்றர்கள் மூலம் முடியாத செயல்களையெல்லாம் முடிக்க முடியும் என ஒவ்வொரு போராளிக் குழுத் தலைமைகளிடமும் திரும்பத் திரும்பச் சொல்ல வைத்து, வெற்றி வெறியாளர்களாக மாற்றியது.

இதனால் போராளிக் குழுக்கள் ஒன்றுக்கொன்று காழ்ப்புணர்ச்சி கொண்டு ஒன்றையொன்று அழிக்க முற்பட்டன, அழிக்கவும் செய்தன.

இலங்கை அரசக்கெதிராக தொடுக்கப்பட்டிருக்கும் ஆயுதப் போராட்டம் எதை நம்பி நடத்துவது? என்பதைச் சிந்திக்க விடாமல், மக்கள் தாமாக ஆயுதப் போராட்டந்தான் ஒரே வழியென்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கான அச்சுறுத்தலை, துரோகிகள் என குற்றஞ்சாட்டல் மூலமாக மரணதண்டனை வழங்களை இனப்பற்று என்ற போர்வையில் வாயிலாக மக்களை ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவாக மாற்றியது. உறவுகளுக்குள்ளேயே மாற்று இயக்கத்தைச் சார்ந்தவர்களை மரண தண்டனைக்குரியவர்கள் என அவர்களின் இறப்புக்கு காரணமாக்கினார்கள்.

இலங்கையில் என்றுமே அமைதியாக அரசாட்சி செய்யும் அரசு அமைந்து விடக்கூடாதென்ற பாரிய வேலைத் திட்டத்தை மிகவும் தெளிவாக நடத்திக் கொண்டிருந்தது இந்திய உளவுப் பிரிவு.

தமிழர்களால் நெருக்கடிக்குள்ளாகும் அரசும், தமிழர்களை விரோதிகளாக அரசியல் வழியாக நோக்கும் அரசும், சிங்களவர்களும் எதிர்பார்த்தபடியே உருவாகத் தொடங்கினர்.

குறைந்தளவு சனத் தொகையைக் கொண்ட தமிழர்களையும் அதற்கமைவான பொருளாதார வழங்களைக் கொண்டு அவ்வினக் குழுமத்திற்குள் தோன்றிய புத்திசீவிகள், ஆயுதப் போராட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு போதும் வெற்றியைத் தேடித் தராது. பெரும் உயிர் அழிவுகளையும், பொருளாதார அழிவுகளையுமே அதன் பலனாகப் பெறுவோம் என அவ்வப்போது சொல்லிய போதெல்லாம் அவர்களைத் துரோகிகளாக்கி, மரணதண்டனைக்குரியவர்களாக்கியது.

ஒவ்வொரு போராளிக் குழுக்களுக்குமிடையில் போராளிகளாக வேசம் போட்டிருந்த உளவாளி ஒற்றர்கள், புத்திசீவிகள் சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றதே எனத் தலைமைகள் உள்வாங்கிய போதெல்லாம், அவர்கள் இலங்கை அரசிற்கு விலை போனவர்கள், இத்தகையவர்களால் எமது போராட்டம் அழிந்துவிடும், புத்திசீவிகள் துரோகிகளே என தொடர்ச்சியாகச் சொல்வதன் மூலம் தலைமைகளுக்கு மூளைச்சலவை செய்து, அவர்களை இசைவாக்கம் செய்ய வைத்தனர்.

போராளிக் குழுக்களினால் மரண தண்டனைக்கு உட்பட்டவர்கள் ஏன் மரணதண்டனைக்கு உட்படுத்தப் பட்டனர்? என்பதை, துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துகையில் அவர்களை மிகவும் மோசமாகச் சித்தரித்துக் காட்டினர்.

இதனால் மரணதண்டனைக்கு உட்பட்டவர்தான் தமிழ் இனத் துரோகி என தமிழர்களில் ஒரு பகுதியினரும், படித்தவர்கள் சொல்வது யதார்த்தந்தானே என இன்னொரு பகுதியினரும் தமிழர்களுக்குள் எதிரெதிராக உருவாகத் தொடங்கினர், பிளவுபடவும் தொடங்கினர்.

இந்திய உளவுப் பிரிவினர், இலங்கை அரசையும், தமிழர்களையும், சிங்களவர்களையும், முஸ்லீம்களையும் கீழ்வரும் நிகழ்ச்சி நிரல் அட்டவணைக்கமையவே கையாண்டனர்.

1. இலங்கையில் இனக்கலவரத்தை ஏற்படுத்தியமை.

2. தாங்கள் பெரும்பான்மையாகவிருந்தும் அரசாங்க திணைக்களங்களில் தமிழர்கள் அதிகாரிகளாகவும், உத்தியோகத்தர்களாகவும் இருப்பதுடன் வணிக நிறுவனங்களும் அவர்களின் கைகளிலேதான் இருக்கின்றன என்பதனால் சிங்களவர்கள் காழ்ப்புணர்வும், வெறுப்பும் கொள்ள வைத்தமை.

3. இனக்கலவரத்தின் மூலம் சிங்களவர்களைத் தமிழர்கள் எதிரியாக நினைக்க வைத்தமை.

4. காலத்துக்குக் காலம் நடைபெற்ற இனக்கலவரங்களினால் தனிநாட்டு எண்ணத்தைத் தமிழ் அரசியல்வாதிகளின் மனதில் வேரூன்றச் செய்தமை.

5. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தாமல் இருப்பதற்காக, சிங்களவர்கள் மத்தியில் இனவாதிகளைக் கொண்டு தமிழருக்கே இனி இலங்கை உடமையாகும் என்ற பிரசாரத்தினால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நெருக்குதலினால்

அவ்வொப்பந்தத்தை கிழித்தெறிய வைத்தமை.

6. அரசியலில் எதிர்ப்புச் சமநிலை பேணுதல் என்ற அணுகுமுறை உண்டு. தமிழர்களிடம் அபிமானம் பெற்ற எந்தவொரு சிங்கள தலைமைகளும் இருக்கக் கூடாதென்பதற்கமைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா - செல்வநாயகம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை, பண்டாரநாயக்காவின் எதிர்ப்பினால் கிடப்பில் போடச் செய்தமை.

7. தமிழர்களின் உரிமைக்கான அறவழி அரசியலைக் கணக்கிலெடுக்கத் தேவையில்லை எனச் சிங்களத் தலைமைகளுக்கு அறிவுரை வழங்கியமை.

8. பல கட்டமைப்புகளைக் கொண்ட, முப்படைகளின் பலமான அணியைக் கொண்ட ஒரு அரசினை ஆயுதப் போராட்டம் மூலம் பணிய வைக்கலாம் என்ற உற்சாகமிகு ஆலொசனைகளைத் தனது ஒற்றர்கள் மூலமாகச் சொல்லியமை.

9. அதற்காக, இலங்கை ஒரு இறைமையுள்ள நாடென்று தெரிந்த போதும் இலங்கையில் தமிழர்களும், சிங்களவர்களும் நிரந்தரமான பகையாளிகளாக இருக்க வேண்டும் என்பதற்காக, தமிழ் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்தமை.

10. இந்திராகாந்தியின் ஆலோசனைகளைக் கேட்க மறுத்த ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுக்கு, பாடம் படிப்பிக்க வேண்டுமென்பதற்காகவும் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்தமை.

11. ஆயுதப் போராட்டம் படிப்படியாக வளர்ச்சியடைய வைத்தமை, அதன் காரணத்தால் இலங்கையை விட்டுத் தமிழர்களைப் புலம்பெயர வைத்தமை.

12. இலங்கையில் தொடர்ந்து வசித்து வருகின்ற தமிழர்களின் மூலம் ஆயுதப் போராட்டத்திற்கான ஆயுதக் கொள்வனவு, நிதிப் போதாக்குறை ஏற்படுமென கண்டறிந்து, புலம்பெயர்ந்த தமிழர்களை அதற்கு ஈடாக மாற்றியமை.

13. யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றப்பட வைத்தமை மூலம் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குமிடையில் விரோதத்தை ஏற்படுத்தியமை.

14. புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழர்கள் மத்தியிலும், இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் தனித்தும், இந்தியத் தூதராலயங்கள் மூலமாகவும் ஊடுருவி, ஈழத்தமிழரின் ஆயுதப் போர் சோழ, பாண்டிய மன்னர்களின் போருக்கு ஒப்பானதெனவும், அதை விஞ்சியதெனவும் பத்திரிகை வாயிலாகவும், ஒருவருக்கொருவர் அதுசார்ந்த உற்சாக வார்த்தைகளைப் பிரச்சார வழியாகவும் பரிமாறிக் கொள்ள வைத்தமை.

15. தமது வலுத் திறனுக்கு மிஞ்சிய பாரத்தை ஈழத்தமிழர்கள் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணராதவாறு, தமிழகத்திலிருந்து புலம்பெயர் நாடுகளுக்குத் தமிழ்ப்பற்றாளர்கள் என்ற போர்வையில் ஊடகங்கள், கட்சிகள் சார்ந்த தமிழர்கள் பலரைப் புலம்பெயர் நாடுகளுக்குச் செல்ல வைத்து, புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் வென்றே தீரும் என்று புளகாங்கிதப் பு+ரிப்பான வார்த்தைகளைச் சொல்ல வைத்தமை.

16. தமிழகத்திலிருக்கும் புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் அரசியல்வாதிகளைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குச் சார்பாக கூட்டங்களில் பேச வைத்தமையும், பேச வைத்தன் மூலம் இலங்கையில் வாழும் தமிழர்கள் உட்பட புலம்பெயர் தமிழர்களைத் தமிழ்நாடு அரசின் உதவி தனிநாட்டுக்குக் கிடைக்கும் என்ற நப்பாசை கொள்ள வைத்தமை.

17. புலம்பெயர் தமிழர்களிலிருந்து கணிசமான தொகையினர் ஆயுதப் போராட்டத்திற்கான அரசியல் ரீதியான ஆதரவினையும், பிரசாரத்தினையும், நிதிப் பங்களிப்பினையும் செய்ய வைத்தமை.

18. புலம்பெயர் நாடுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பவர்களின் பலமான வலைப்பின்னலை உருவாக்க பக்கபலமாக இருந்தமையை வைத்து, இலங்கை அரசின் இராணுவ விஸ்தரிப்பைத் தமிழ் நிலங்களில் ஏற்படுத்தியமை.

19. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் போராளிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் ஏற்பட்ட மோதலில் இலட்சக்கணக்கான தமிழர்கள் மரணத்தைத் தழுவும் உபாயத்தை ஏற்படுத்தியதுடன், தமிழரின் சொத்துகளான வீடுகளும், அதுசார்ந்த சொத்துகளும் அழிந்ததுடன், அவர்கள் வாழ்ந்த நிலங்களும், இராணுவ மயப்படுத்தலுக்கு உள்ளாக்க வழிவகுத்தமை.

20. இலங்கைத் தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கான ஆதரவானது தமிழருக்கான உரிமையை வென்றெடுப்பதற்கானதல்ல. தமிழரைப் பகடைக் காய்களாக்கி, இலங்கையைக் கையாளவதற்கே என்பதை தமிழீழ விடுதலைப் போராட்டக் காலத்தில் இந்திய முப்படைகளின் ஒத்துழைப்பு வழங்கிமை.

21. வடக்கு, கிழக்கை இணைத்துக் கொடுத்து, பின் அதை ஏற்றுக்கொள்ள முடியாது எனச் சொல்ல வைத்தமையும், தனிநாடுதான் என்ற தீவிரப் போக்கை ஏற்படுத்த வைத்தமை.

22. இலங்கை அரசுடன் சனநாயக இராஜதந்திர வழிகளில் அணுகி, தமிழரின் உரிமைப் பிரச்சினைக்கானத் தீர்வினை நோக்கிச் செல்லும் அரசியல் அணுகுமுறைப் பாதையில் தடைகளைப் புலம்பெயர் நாடுகளில் இன்னும் தனிநாட்டுக் கொள்கைக்கான செயல்பாடு இருப்பதாகக் காட்டி, இலங்கை அரசைத் தொடர்ச்சியாக தமிழர் நிலங்களில் இராணுவ மயப்படுத்தலைத் தொடர்வதற்கானத் தந்திரத்தை நடைமுறைப்படுத்தல். இங்குள்ள சிலரை தமது ஒற்றர்களாக பயன்படுத்திக் கொண்டிருப்பது.

இவ்வாறாக இந்திய தேசம், தனது உளவு நிறுவனத்தைக் கொண்டு இலங்கையில் வாழும் அனைத்து இனமக்களையும் ஒற்றுமைப்படாமல் தொடர்ந்து பிளவுகளை ஏற்படுத்தி வருவதுடன், இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைக்கும் அவர்களே காரணமென்பதை அடுத்துவரும் தொடரில் பார்ப்போம்...

Radio - by - Phone

18 ஆம் ஆண்டில்....

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

**00 4934 5483411998**

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

மேலதீக விபரங்களுக்கு...
**www.etr.fm**

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

தேவன்

# வேகம் விவேகம் அல்ல

பிரான்சு மற்றும் பிரித்தானியக் கூட்டுத் தயாரிப்பான *Concorde 4590* என்ற அதிவேக வானூர்தி, *25.07.2000* அன்று பிரான்சின் *CDG* வானூர்தித் தளத்திலிருந்து புறப்பட்டு *133* செக்கன்களில் தீப்பிடித்து எரிந்து வீழ்ந்தது.

*109* பயணிகளோடு மாலை *15.45* மணிக்கு அமெரிக்கா நோக்கிப் புறப்பட்ட இவ் விமானமே, அன்றைய நாளில் உலகின் அதிவேகப் பயணிகள் விமானமாகும். *6,630* கி.மீ தூரம்கொண்ட அத்திலாந்திக் சமுத்திரத்தை வெறுமனே *3*மணி *20* நிமிட நேரத்தில் (மணிக்கு *2,180* கி.மீ) கடந்துவிடும் இந்த விமானம், தனது ஒரு முறைப்பயணத்திற்கு மட்டும் விழுங்கும் எரிபொருளின் மதிப்பு *11,000* டொலர்கள்.

காலையில் பிரான்சிலிருந்து



புறப்படும் ஒருவர், மதியம் நியூயார்க்கில் நடைபெறும் சந்திப்பில் கலந்துகொண்டுவிட்டு, மீண்டும் மாலை *6* மணிக்கு பிரான்சிலுள்ள தனது வீட்டிற்குத் திரும்பி விடலாம் என்பதுவே இவ்வானூர்தியின் விளம்பர வாசகங்கள்.

இவ்வானூர்தி விபத்துக்குள்ளான அன்று, *96* யேர்மானியர்கள், ஓர் அமெரிக்கர், ஓர் ஒசுத்திரியா நாட்டைச் சேர்ந்தவர் உள்ளடங்கலாக *110* பேர் பயணித்தார்கள். இதில் பயணித்த யேர்மனியர்கள் அனைவருமே *2,900* யேர்மனிய மார்க் (அப்போது யூரோ புழக்கத்திற்கு வரவில்லை) செலவில் அமெரிக்காவின் நியூயார்கிலிருந்து, ஈக்வடோர் நாட்டிற்குச் செல்லும் சொகுசு கப்பலான ***MS Deutschland*** இல் விடுமுறையைக் களிக்கப் புறப்பட்டவர்கள். பெரும்பலானோர் யேர்மனியச் செல்வந்தர்கள். உலகையே சோகத்தில் ஆழ்த்திய இத்திடுநேர்கைக்கான காரணம் என்னவென்பதை இருபது வருடங்களுக்குப் பிறகு, கடந்த





23.05.2020 அன்று அலுவலக முறைமையில் வெளியிட்டிருந்தார்கள்.

***Concorde 4590*** வானூர்தி புறப்பட்ட ஓடுபாதையில், அதற்கு முன்பதாகப் புறப்பட்ட அமெரிக்க வானூர்தியான ***Air Continental*** இலிருந்து சிறிய அளவிலான உலோகத் தகடொன்று கழன்று வீழ்ந்திருக்கிறது. இந்தத் தகட்டின் மீது வானூர்திச்சக்கரம் உராய்வுற்றுக் கிழிந்த வேகத்திலேயே, சக்கரச் சிதறல்கள் விமானத்தின் கீழுள்ள எரிபொருள் தாங்கியில் பட்டு, அச்சக்கரத்துகள்களின் அதிகூடிய வெப்பம் ஏற்படுத்திய தாக்கமே தீயை உண்டாக்கி, திடுநேர்கையை ஏற்படுத்தியிருக்கிறது. 95 டன் எடையுள்ள 115,000 லீற்றர்கள் எரிபொருள் நிரப்பப்பட்டிருந்த தாங்கி, தீப்பிடித்த மறுகணமே இடதுபுற இயந்திரமும் தீப்பற்ற, மணிக்கு 400கிமீ வேகத்தில் மேலெழுந்து கொண்டிருந்த வானூர்தியை மீள, வானூர்தித் தளத்திற்கே திருப்ப முயன்ற ஓட்டிகளின் கட்டுக் கடங்காத ***Concorde 4590*** ஓர் கட்டிடத்தின் மீது வீழ்ந்து நொருங்கியது.

2000 ஆண்டிலேயே 1.3 பில்லியன் டொலர்கள் தயாரிப்புச் செலவு கொண்ட இவ்வானூர்திகளின் சகாப்தம் அன்றோடு முடிவிற்கு வந்தது, ***NASA*** வின் விண்ணூர்தியான ***Appolo*** விற்கு இணையான வேகம் கொண்டதெனப் புகழப்பட்ட ***ConCorde*** இன் இன்னுமொரு வானூர்தி இப்பொழுது பிரான்சின் ***CDG*** வானூர்தித் தளத்தில் காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது.



CENTURY
TRAVELS




FRANKFURT - COLOMBO

Ab 769€

5 STAR SERVICE

CENTURY
TRAVELS

Nishanthan 0176 2168 2149

0231 58 96 557 | 0231 55 74 319

Rheinische Str.29-44137-Dortmund | www.centurytravels.de | info@centurytravels.de



V BOX
ONE MONTH FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRILANKA,
FOR EVER
V BOX PURCHSED IN
GERMANY.
SUPER
SALE
IN GERMANY
FREE
TALK
TIME
119 €
ONLY
CALL
+49 1514 6978484